Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003

விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்ப முடிவுத் திகதி : 15.12.2002

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.



மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 9 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 19 (25.11.2002) திங்கட்கிழமை இதழ் : 56


# பாதுகாப்பு, அரசியல் விவகாரங்கள்;

# ரணில் – பாலா ஒரு மணி நேரம் பேச்சு!

## மகிழ்ச்சியான நம்பிக்கையூட்டும் சந்திப்பு என்கிறார் பாலசிங்கம்

(ஒஸ்லோ)

**நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று மாலை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.**

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஒஸ்லோவுக்குச் சென்றுள்ள கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சுமார் ஒரு மணி நேரம் பேச்சுக்களை நடத்திய தாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச்சந்திப்பு நோர்வே நேரப்படி நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமானது.

இச்சந்திப்பின்போது நெடுந்தீவுப் பிரச்சினை குறித்தும் இருவரும் பேச்சு நடாத்தியிருந்தனர். இதன்போது இப்பிரச்சினைக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் கதைத்து தீர்வு காண நடவடிக்கை

(10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்று ஒஸ்லோவில் நடந்த சந்திப்பில் ரணில் – பாலா.

## 108 வருடப் பழைமை வாய்ந்த விடுதியில் நடைபெறும் கூட்டம்



(ஒஸ்லோ)

நோர்வேயில் இன்று ஆரம்பமாகும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம், ஒஸ்லோவில் இருந்து 30 நிமிட நேரப் பயணத்தில் அடையக் கூடிய ஹோல்மென்கொலன் பார்க் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

மலையொன்றில் அமைந்துள்ள இந்த ஹோட்டல், 108 வருடகால பழைமை வாய்ந்ததாகும். முன்னர் காச நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த இந்த விடுதி, 2 ஆம் உலக யுத்தத்தின் பின்னர் ஹோட்டலாக மாற்றப்பட்டது.

1982ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகப் பனிச்சறுக்குப் போட்டி மாநாடு இங்கேயே இடம்பெற்றிருந்தது. இவ்விடுதிக்கு அருகில் பனிச்சறுக்கு மைதானம் ஒன்று உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விண்ணாணம் விநாசியர்



கதிர்காமருக்கு இப்ப சனி திசை போல கிடக்கு...

## 40 நாடுகள் பங்குபற்றும் உதவி வழங்கும் மாநாடு!

### ஒஸ்லோவில் இன்று ஆரம்பம்

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் இன்று காலை ஆரம்பமாகவுள்ள, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் 40 நாடுகள் பங்குகொள்வதாக பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் பங்குகொள்ளும் நாடுகளின் முக்கியமான பிரதிநிதிகள் பலர், நேற்று மாலையே ஒஸ்லோ சென்றுவிட்டனர். நேற்றிரவும் இன்று அதிகாலையும் மேலும் பல நாடுகளின் பிரதிநிதிகளும் ஒஸ்லோவை சென்றடைந்து. கொண்டிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே மீது தேவையற்ற குற்றச்சாட்டு கதிர்காமருக்கு அமெரிக்கா கண்டனம்!



### முக்கிய சில விடயங்களில் புலிகளுக்குப் பாராட்டு

(கொழும்பு)

நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவும், பேச்சுக்களில் பாரபட்சமாகவும் நடந்துகொள்வதாக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருந்த கருத்துக்கு அமெரிக்காவின் தூதுவர் அஷ்லி வில்ஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நோர்வே அரசாங்கம் எந்தவிதமான பலாபலனும் இன்றியே இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பங்களிக்கின்றது. இவ்வாறான நிலையில் பொ.ஐ.முன்னணியின் கருத்து பாரதூரமானதாகும்.

லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுள்ள இந்தக்கருத்தை நோர்வே மீது குற்றஞ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நெடுந்தீவில் உடனடி நடவடிக்கைகள்

### அமைச்சர், படைத்தரப்பு - மக்களுடன் பேச்சு

(நெடுந்தீவிலிருந்து லிவிங்ஸ்டன்)

நெடுந்தீவில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், அங்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி மக்களின் வாழ்வில் இயல்பு நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் நெடுந்தீவிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். நெடுந்தீவில் ஈ.பி.டி.பி கட்சியினரை வெளியேறுமாறு கோரி போராட்டம் நடத்துகின்ற மக்களையும் அங்கு கடமையிலுள்ள பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகளையும் அமைச்சர் (10 ஆம் பக்கம் பார்க்க)



## தேசியக் கொடியேற்றலுடன் இன்று மாவீரர் எழுச்சி நாட்கள் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியக்கொடி ஏற்றலுடன் இவ்வாண்டுக்கான மாவீரர் எழுச்சி நாட்கள் இன்றுமுதல் ஆரம்பமாகின்றன.

இன்று காலை 8 மணிக்கு அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் பணிமனைகள், தளங்கள், பொது நிறுவனங்கள் போன்றவற்றில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றிவைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சியுடன் இவ்வாண்டுக்கான மாவீரர் எழுச்சி நாட்கள் ஆரம்பமாகின்றன.

இன்று முதல் மூன்று நாட்கள் மாவீரர் எழுச்சி நாட்களுக்கான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தினமும் அனைத்து இடங்களிலும் மேற்படி நிகழ்வுகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தினமும் காலை பொதுச்சுடர் ஏற்றல், (10 ஆம் பக்கம் பார்க்க)


SERENDIB

எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!

விமான சேவை

J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019

(சி-148)

# விளையாட்டு

## ஆஷஸ் கிண்ண டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியா 2 ஆவது வெற்றி

(அடலெய்ட்)

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் அடலெய்டில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில், 342 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 552 ஓட்டங்களைப் பெற்று, ஆட்டத்தை இடை நிறுத்தியிருந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி, போட்டியின் நான்காவது நாளான நேற்று, 159 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இதனால் அவுஸ்திரேலியாவிடம் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 51 ஓட்டங்களால் படுதோல்வி காண நேரிட்டது.



பிந்தை விளாசும் அலக் ஸ்ருவர்ட்




விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் அவுஸ்திரேலிய அணியினர்

இங்கிலாந்து அணிவீரர் அலெக் ஸ்ருவர்ட் தனது 41ஆவது அரைச் சதத்தை இப்போட்டியில் பெற்றார். அத்துடன் இவர் 8000 ஓட்டங்களை டெஸ்ட் போட்டிகளில் பெற்ற நான்காவது இங்கிலாந்து வீரர் என்ற பெருமையையும் தட்டிக்கொண்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம், அவுஸ்திரேலிய அணி 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் கிண்ண டெஸ்ட்தொடரில் 2 போட்டிகளில் வெற்றிபெற்று முன்னிலையில் இருக்கின்றது. அடுத்த போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

## மேற்கிந்தியத் தீவுகளிடம் இந்திய அணி படுதோல்வி

### - தொடரையும் இழந்தது -



சாமுவெல்ஸ்



லோசன்

(விஜயவாடா)

விஜயவாடா நகரில் நேற்று நடந்த இந்திய - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான ஏழாவதும் இறுதியுமான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 135 ஓட்டங்களால் வென்றது.

இந்த வெற்றியின் மூலம் ஏழு போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் 4:3 என்ற கணக்கில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றிபெற்று ரி.வி.எஸ். கிண்ணத்தைக் கைப்பற்றியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 315 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்திய அணி வீரர் மாலன் சாமுவெல்ஸ் 75 பந்துகளில் 108 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் 11 பவுண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களையும் விளாசித்தள்ளினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 180 ஓட்டங்களுக்குத் தனது அணிவீரர்கள் அனைவரையும் இழந்தது. மேற்கிந்திய அணியின் இளம் பந்துவீச்சாளர் லோசன், இந்திய அணியின் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தி அணியின் வெற்றிக்கு வழிகோலினார். இந்திய அணியில், யுவராஜ்சிங் 69 பந்துகளில் 68 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக மாலன் சாமுவெல்ஸ்ஸும், தொடர் நாயகனாக ஹெய்லும் தெரிவாகினர்.


சிறு விளம்பரம்

விற்பனைக்குண்டு

நல்லநிலையிலுள்ள, கடைப் பாவனைக்குரிய - 8 அடிஉயரம், 10 அடி நீளமுள்ள இரும்புச் சுருக்குக் கதவு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S. தயாதரன், c/o M.பழனியப்பன், 543, ஆடிய பாதம் றோட், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (043)

ராஜா யாழ்ப்பாணம்.



STR பிலிம்ஸ் வெளியீடு அஜித் (இரட்டை வேடம்) கிரண், மீனா நடித்த

வில்லன்

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)

இயக்கம்: K.S.ரவிக்குமார். (சி-151)

நிரஞ்சனாஸ் சங்கானை

25-11-2002 முதல் வினித், நந்தினி நடித்த ஆவாரம்பூ

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 புதன், வியாழன் மட்டும் இரவு 8.45 காட்சி

BLACK EAGLE (கராட்டிப்படம்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 5.45, 7.45 (சி-139)


# சின்னஞ்சிறு செய்திகள்

### வாதரவத்தை மக்களுக்காக ஓட்டோ அன்பளிப்பு

புத்தூர் வாதரவத்தை மக்களின் அடிப்படை வசதி கருதி, இந்து சமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் ஓட்டோ ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வாதரவத்தைக் கிராம வளர்ச்சிக்காகவும் மற்றும் மருத்துவ, போக்குவரத்து வசதிக்காகவுமே, இந்த ஆட்டோ அப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (110)

### கூட்டுறவுச் சங்கத் தலைவராக தெரிவு

(தீவகம்)

புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக பரராஜசிங்கம் - கனகலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர், இச்சங்கம் இடம்பெயர்ந்து வன்னியில் இயங்கியபோதும் தலைவராகப் பதவி வகித்திருந்தார்.(112)

### சாவகச்சேரி வீதியில் நிரப்பப்படாத குழிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகிலுள்ள குழிகளைச் செப்பனிடுமாறு, பல முறை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரியும் பலனேதும் கிடைக்கவில்லை.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வரும் வாகனங்கள் - வீதியால் பயணிப்போர் மீது இக்குழிகளிலுள்ள சேற்று நீரைத் தெளித்துவிடுகின்றமையால் பயணிகள் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (29)

### தென்மராட்சியில் பன்றிகள் அட்டகாசம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வயல், மட்டுவில், சரசாலை பகுதிகளில் அண்மைக் காலமாகப் பன்றிகளின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

நெல்வயல்களுக்குள் கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் நெற்பயிர்களை அழித்து வருவதோடு, பனம் பாத்திகளையும் கிளறிச் சேதமாக்குகின்றன. கடந்தகால இடப்பெயர்வுகளினால் பற்றைகள் மண்டிக்கிடக்கும் பிரதேசங்களில் இருந்து பன்றிகள், தற்போது குடியிருப்புக்களில் புகுந்து, பயிர் வகைகளையும் அழிக்கின்றன. (29)

### வெப்தள 'டிரெக்ரி' வெளிவந்துள்ளது

(மானிப்பாய்)

இலங்கையில் முதன் முதலாக வெப்தள முகவரிகளை அகர வரிசைப்படுத்தி "வெப் டிரெக் 2003" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

வெப் இன்டர்நஷனல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் வே.நவமோகனின் ஓராண்டு காலத்தேடலின் முயற்சியால் வெளிவந்துள்ள இந்த டிரெக்ரியில் 5,000 இற்கு மேற்பட்ட வெப்தள முகவரிகள் 140 தலைப்புக்களில் பட்டியலிடப்பட்டுள்ளன. (100)

### உயர்தர ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(மீசாலை)

க.பொ.த. உயர்தர வகுப்புகளில் பொது ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு, வடமராட்சி வலய ஆசிரிய நிலையத்தில் நடைபெற்றுவருகிறது.

இச்செயலமர்வு நாளைவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

### செயன்முறைப் பரீட்சைகள்

(சாவகச்சேரி)

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தினூடாக 2 ஆவது தடவையாக க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கீதம், மனையியல், விவசாயம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் அனைவரையும், இன்றையதினம் உரிய ஆயத்தங்களுடன் வருமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.(29)

### கொழும்புத்துறைக்கு மின்வசதி செய்துதர கோரிக்கை

இருளில் மூழ்கிப்போயுள்ள கொழும்புத்துறைப் பகுதி வீதிகளுக்கு - மின்னொளி வசதிகள் ஏற்படுத்தித் தருமாறு கோரி, கொழும்புத்துறை இந்து இளைஞர் மன்றத்தினால் இலங்கை மின்சார சபைக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

### கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(ஆனைக்கோட்டை)

நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளில் முன்னரைவிடத் தற்போது கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள், பெருமளவாக இப்பகுதிகளில் வாழ்வதால் - அக்குடும்பத் தலைவர்கள் இதனைக் குடித்துவிட்டு குடும்பச் சச்சரவுகளில் ஈடுபடுவதுடன் சமூகச் சீர்கேடுகளும் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (46)

### மட்டுவிலில் 252 பேருக்கு மருத்துவ பரிசோதனை

(சரசாலை)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் - அண்மையில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட, இலவச மருத்துவ முகாமில் - 252 பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (34)

### 25 தொலைபேசி இணைப்புகள் துண்டிப்பு!

(மீசாலை)

யாழ்.மாவட்டத்திலுள்ள 25 "மோட்டோறோலா" தொலைபேசி இணைப்புகள் மீண்டும் துண்டிக்கப்பட்டுள்ளன.

"சோலர்" பாவனைக் கட்டணம் செலுத்தாத 225 பாவனையாளர்களது இணைப்புக்கள் கடந்த மாதம துண்டிக்கப்பட்டிருந்தது. பின்னர் அமைச்சர் மகேஸ்வரன் தலையிட்டு இணைப்புக்களை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தார். எனினும், கடந்த சில நாட்களில் 25 இணைப்புக்கள் மீண்டும் துண்டிக்கப்பட்டது குறித்து, பாவனையாளர்கள் மிகுந்த கவலை தெரிவித்துள்ளனர். (25)

### காயமடைந்த வயோதிபர் மரணம்!

(உரும்பிராய்)

உரும்பிராயில் இராணுவ ட்ரக் வண்டியுடன் மோதி படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமடைந்தார்.

உரும்பிராயைச் சேர்ந்த தேநீர் கடை ஒன்றின் உரிமையாளரான பஞ்சலிங்கம் என்பவரே விபத்துக்குள்ளாகி தலையில் படுகாயமடைந்தவராவார். (84,111)

### கருத்தரங்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சியும், கருத்தரங்கும் நவம்பர் 30, டிசம்பர் 01 ஆகிய திகதிகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் தலைமை தாங்கவுள்ளார். இதில் பலர் கருத்துரை வழங்கவுள்ளனர். (29)

### சைக்கிள் திருடன் மடக்கி பிடிக்கப்பட்டார்

(நாவாந்துறை)

யாழ்.ஐந்து சந்திப் பகுதியிலுள்ள வீட்டினுள் புகுந்து சைக்கிள் திருடிய நபரை, அப்பகுதி இளைஞர்கள் கையும் மெய்யுமாகப் பிடித்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மேற்படி திருடனிடம் இருந்த ஒரு திறப்புக்கோர்வை, பாஸ் மற்றும் சில ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டதுடன் மக்கள் திருடனை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர். (66)

# அரச ஊழியர்களுக்கு அடுத்த வருட நடுப்பகுதியில் சம்பள உயர்வு!

## நிதியமைச்சர் சொக்ஸி நம்பிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த வருட நடுப்பகுதியில் சம்பள உயர்வு வழங்கக்கூடியதாக இருக்கும் என்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் தற்போது வளர்ச்சியடையும் அறிகுறிகள் தென்படுகின்றன. இதனால் அடுத்த வருட நடுப்பகுதியில் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கக்கூடியதாக இருக்கும். நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்ததும் இது சாத்தியமாகும் எனத் தெரிவித்துள்ள நிதியமைச்சர் -

திஸ்ஸ தேவேந்திர ஆணைக்குழுவின் சம்பள உயர்வு தொடர்பான சிபார்சுகளை அரசாங்கம் ஒரு போதும் நடைமுறைப்படுத்தாது எனவும் தெரிவித்தார். இந்த ஆணைக்குழு அரசசேவையில் உள்ள மூன்றிலொரு பகுதி ஊழியர்களை குறித்த காலத்துக்கு முன்னரே ஓய்வு பெறும் திட்டத்தைச் சிபார்சு செய்துள்ளது.

இது அமுலாக்கப்பட்டால் நாட்டினது பொருளாதாரம், சமூகப் பாதுகாப்பு என்பனவற்றுக்குப் பாதிப்பு ஏற்படும்.

இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் நாட்டின் பொருளாதாரம் வருத்தியடையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகள் எண்ணாயிரம் பேர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 8,000 ஆக உயர்ந்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயரதிகாரி ஷேர்மன் டீ றோஸ் தெரிவிக்கையில் -

குறிப்பிட்ட தொகையானோரில் 500 பேரளவிலேயே முற்றாகப் பாதிப்படைந்தவர்களாகக் கண்டறியப்பட்டுள்ளனர் எனவும்,

மீதிப்பேர் நோய்த்தொற்றுக்கு ஆளானவர்களே எனவும் தெரிவித்தார்.

இதேவேளை - இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்களைப் பராமரிப்பதில் - அரசாங்கம் அக்கறையீனமாக இருந்து வருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

## கட்டுத்துவக்கு வெடித்துக் காயம்

(கொழும்புத்துறை)

காட்டுக்கு விறகு வெட்டுவதற்காக சென்றவேளை கட்டுத்துவக்கு வெடித்ததில் இடது காலில் குண்டு பட்டு காயமடைந்த நிலையில, குடமயன், வரணியைச் சேர்ந்த திருநாவுக்கரசு அருட்செல்வம் (வயது 27) என்பவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (60)

## றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.00 |
| சுபஹ் | 5.15 |
| உதயம் | 6.35 |
| லுஹர் | 12.29 |
| அஸர் | 3.51 |
| ம.ஃரிப் | 6.21 |
| இஷா | 7.35 |

# ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த 70 கைதிகள் விரைவில் விடுதலை!

## அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவிப்பு

(கொழும்பு நிருபர்)


களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் 70 பேர் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் என சிறைச்சாலைக்கு விஜயம் செய்த பின்னர், அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 9 ஆம் திகதி, களுத துறைக்கு விஜயம் செய்த பின்னர் 78 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன. 34 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கினறனர். தற்போது களுததுறையில் 111பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த 70 பேர் விரைவில் விடுவிக்கப்படுவர் எனவும் அமைச்சர் மிலிந்த மொறகொட மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- மிலிந்த மொறகொடவின் சிறைச்சாலை விஜயம், தமக்கு திருப்தி அளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை என்றும், மீண்டும் ஒரு உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதானால் அது குறித்து அரசாங்கத்திற்கு முன் கூட்டியே தகவல் வழங்கப்படும் என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் தெரிவித்துள்ளனர்.



பட்டிப்பளையில் நேற்றுமுன்தினம் தமிழீழமாவட்ட நீதிமன்றப் பெயர்ப்பலகையை மட்டு. - அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஸ் திறந்துவைப்பதையும், நீதிமன்றில் வழக்கு விசாரணை இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

# நோர்வே புலிகளுக்கு சார்பாக நடந்து கொள்ளவில்லை!

## பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன்



(ஒஸ்லோ)

நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்குச் சார்பான வகையில் செயற் படுகின்றது என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நிராகரித்துள்ளார்.

நோர்வே நடுநிலைமையோடு தான் செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதி சந்திரிகாவினது கூற்றுத் தவறானது என்றும் அவர் கூறினார்.

அத்துடன் - நோர்வே சந்திப்புப் பற்றிக் குறிப்பிட்ட அவர், பணத்தைத் திரட்டிக் கொள்வதென்பது எமக்கு முக்கியமானதல்ல. அரசியல் ரீதியான சந்திப்பு என்பதும், இலங்கைப்பிரச்சினையில் இவ்விதமான சர்வதேச பங்களிப்பு என்பதன் தொடக்கம் இதுவே என்பதும் தான் மிக முக்கியதுமானது எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோவில் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனை வலியுறுத்திக் கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசும்போது - இலங்கையில் 50 வருடங்களாக இனப்பிரச்சினை நிலவுகின்றது. 20 ஆண்டுகள் வன்முறைகள் சார்ந்ததாக பிரச்சினை மாறிவிட்டது. எனவே, நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் கட்டியெழுப்ப நாளாகவே செய்யும். அதற்கான முயற்சிகள்தான் தற்போது நடக்கின்றன. தற்போது கிடைத்துள்ள அமைதி இன்னமும் வளர்க்கப்படுவதோடு, முன்னேற்றமானதாகவும் அமைய வேண்டும் என்றும் ஹெல்கிசன் கூறினார்.

## தமிழீழ மாவீரர் நாள் - நவம்பர் - 27

மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல; எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.



வே. பிரபாகரன்
தமிழீழத் தேசியத் தலைவர்

## தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே!

தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்த்தும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
உயிரினை ஈந்து
உடலினை உரமிட்டு
செங்குருதியால் வரலாறு படைத்து
தமிழீழ மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய வேதங்களாய்
ஈழ மண்ணில் புது விதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவார்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்

தமிழ் இன விடிவிற்காய் மரணித்தவர்கள்
தேசம் தூங்கிய போது விழித்திருந்தவர்கள்
உணர்வுத் தீக்களை தமக்குள்ளே சிறைப்
போட்டவர்கள்
தேச மக்களின் பாசப் பிணைப்புகளுக்காக
தமது பாசங்களைப் பொசுக்கியவர்கள்
பள்ளிப் பராயத்தை பள்ளித் தோழருக்காய்
பறிகொடுத்தவர்கள்
ஊரெல்லாம் உறங்கும் வேளை
உறக்கமின்றி விழித்தவர்கள்
எல்லை சுற்றி வெளிச்சிலையாய்
நின்றவர்கள்
தமது மக்களுக்காய் கால்களை, கரங்களை
இழந்து நின்றவர்கள்.

தமிழீழ மாவீரர்
பணிமனை

யாழ். மருத்துவபீடத்திற்கு

# 20 வருடங்களுக்குப் பிறகு சிங்கள மாணவர்கள்!

கடந்த இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவபீடத்திற்கு 28 சிங்கள மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியை மேற்கொண்டிருந்த சிங்கள மாணவர்கள் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு மாற்றலாகிச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதில் இடிந்து வீழ்ந்து இராணுவ சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர், அவர் மீது மதிலொன்று இடிந்து வீழ்ந்ததால் படுகாயமடைந்தார்.

கடந்த புதன்கிழமையன்று இச் சம்பவம் நடைபெற்றது.

தனது சக சிப்பாய்களுடன் பணியொன்றில் ஈடுபட்டிருந்த போதே இச்சம்பவம் நடந்ததாகவும், தற்போது படுகாயமடைந்தவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# ஓய்வூதிய நிலுவைகள் அடுத்த வருடமே கிடைக்கும்!

(கொழும்பு)

ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படவிருக்கும் நிலுவைப் பணம் டிசம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னரே வழங்கப்படும் என்று, அமைச்சர் வஜிர அபேவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இந்த நிலுவைப் பணத்தை வழங்குவதற்கு திறைசேரியினால் 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கோவைகளில் ஏற்பட்ட பிரச்சனைகள், திறமைகாண் பரீட்சைகளின் பெறுபேறுகள் கிடைக்காமை போன்ற சிறு, சிறு காரணங்களால் கொடுப்பனவு வழங்கப்படாமல் உள்ள ஓய்வூதியர்கள் பலர் திணைக்களத்துக்கு முறையிட்டுள்ளார்கள் என்று அமைச்சர் வஜிர அபேவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இப்படியான முறையீடுகள் இனி மேல் நிகழாது பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

### மாவீரர் தினத்தின்போது

# உயிலங்குளம், மடு வீதிகளை திறக்க படையினர் இணக்கம்!

(வவுனியா நிருபர்)

மாவீரர் தினத்தன்று - ஆண்டான்குளம், பண்டிவிரிச்சான் பகுதிகளிலுள்ள மன்னார் மாவட்ட மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு பொது மக்கள் சென்று வருவதற்கு வசதியாக - உயிலங்குளம், மடு வீதிகளை அன்றிரவு 10 மணி வரை திறந்துவிட - படைத்தரப்பு இணங்கியுள்ளது.

மன்னார் மாவட்ட விடுதலைப்புலிகளின் அரசியற் பொறுப்பாளர் அமுதாப், மாவட்ட இராணுவ அதிகாரி பிரிகேடியர் சரத் பெர்ணான்டோ ஆகியோருக்கிடையே மன்னார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் இந்த இணக்கம் எட்டப்பட்டது.

இதேவேளை - மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 800 மாவீரர்களின் பெற்றோர், நானாட்டான் மகாவித்தியாலயத்தில் வைத்து, விடுதலைப் புலிளால் கடந்த வியாழனன்று கௌரவிககப்பட்டனர்.

### மாவீரர்களின் நினைவாக

## மர நடுகை செய்ய கோரும் சன சமூக நிலைய சமாசம்

(நல்லூர்)

மாவீரர் எழுச்சி வாரத்தையொட்டி சகல சனசமூக நிலையங்களினதும் உறுப்பினர்களையும், தத்தமது பகுதிகளில் மரநடுகை மற்றும் சிரமதானப் பணிகளில் உ ணர்வுபூர்வமாக ஈடுபடுமாறு - சனசமூக நிலையங்களின சமாசத் தலைவர் க.நாகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை - சனசமூக நிலையங்களை அலங்கரிக்கத் தேவையான பதாகை மற்றும் சுவரொட்டிகளை - வைமன் வீதியிலுள்ள நல்லூர் கோட்ட அரசியற் துறையினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (57)



இளவாலை சென். ஜேம்ஸ் வீதியில் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வீதியின் குறுக்கே உள்ள காவலரணால் - மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் பல இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். பல இராணுவ முகாம் பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறான காவலரண்கள், தடைகள் என்பன அகற்றப்பட்டுள்ள போதும், இளவாலை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் உள்ள காவலரண் அகற்றப்படாமல் உள்ளது. சிறிய வீதியின் அரைப்பகுதியைத் தடை செய்தபடி உள்ள இக்காவலரண் இளவாலை கன்னியர் மகாவித்தியாலயத்தின் மதிலின் மேல் அமைக்கப்பட்டுள்ளதுடன், இக்காவலரணின் பாதுகாப்பிற்கென முட்கம்பிகள் பாடசாலைச் சூழலில் போடப்பட்டுள்ளதால் மாணவிகள் பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (71)

### சட்டவிரோதமாக சாராயம் விற்றோர் பொலிசாரால் கைது

(மீசாலை)

பொலிசார் திடீரெனச் சோதனையிட்டதை அடுத்து சட்டவிரோதமான முறையில் சாராயம் விற்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் கைதடி மத்தி, கைதடி மேற்கு ஆகிய இரு கள்ளு விற்கும் தவறணைகளில் பல வகைச சாராயம் விற்கப் பட்டதைக் கண்டு பிடித்த பொலிசார் - இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது - குற்றத்தை ஒப்புக் கொண்ட இருவரும் தலா 1000 ரூபா தண்டப் பணம் செலுத்திச் சென்றனர். (25)

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் :ம.தனஞ்சஜன்
முகவரி: வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

ஏழாவது அகவையில்.



பெயர் : நி.சாமந்தி
முகவரி:ம.ம.வீதி, நெல்லியடி

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

குறிப்பு:- இம்மாத முடிவு மட்டும் ஐந்து கூப்பன்களை அனுப்பலாம்.

# மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு, போக்குவரத்து ஒழுங்குகள் அறிவிப்பு!

**நாளை மறுநாள் அனுஷ்டிக்கப்படவுள்ள தமிழீழ மாவீரர் நாளில், மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு மற்றும், துயிலுமில்லங்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து யாழ். மாவட்ட மாவீரர் பணிமனை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அவ் அறிக்கையின் முழுவிபரம் வருமாறு.**

மாவீரர் நாள் தமிழரின் தேசிய நாள். இது எம் தேசத்தின் திருநாள். தாயக விடுதலைப் போரிலே தங்களை ஆகுதியாக்கிய தங்கங்களை தாயகம் எங்கும் நினைவு கூரும் தனிப்பெருநாள். இடியெனவும் புயலெனவும் எதிரிக்கு அடிகொடுத்தவர்களை எம் இதயங்களில் பூசிக்கும் திருநாள்.

யாழ்.குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் ஏழு வருட காலமாக எமது மனங்களுக்கும் நான்கு சுவர்களுக்கும் மட்டுமே தெரியக்கூடியதாக நடாத்திய இத்திருநாள், இவ்வருடம் எட்டுத் திக்கும் கேட்கக்கூடியதாக எல்லோர் மனங்களையும் தட்டி எழுப்பக்கூடியதாக எழுச்சி கொள்ளப்படும். வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, சந்திகள், பிரதான வீதிகளில் மாவீரர்களை நினைவு கூரும் முகமாக பதாகைகளை தொங்கவிட்டு, மாவீரர் நினைவு வளைவுகளைத் தாங்கியபடி எமது தேசம் எழுச்சியுடன் புனிதமும் அடைகின்ற இந்நாளிலே, இப்பெரு வீரர்களாம் மாவீரர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களைத் தமிழர்களாகிய நாம் அனைவரும் போற்றிப் பாதுகாக்க வேண்டியவர்களாவோம்.

மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்று காலை 8 மணிக்குத் தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். 25, 26 ஆகிய தினங்களில் - கிராமங்கள் தோறும் சன சமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் ரீதியாகவும் மாவீரரின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு இடம்பெறும்.

**மாவீரர் தினத்தில் (27.11.2002) கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெறும் இடங்கள்**

கோப்பாயில் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மற்றும் கோப்பாய் சைவத் தமிழ் வித்தியாலயம் உரும்பிராய் ஆகிய இடங்களிலும், வடமராட்சியில் உடுப்பிட்டி (எள்ளங்குளம்) அப்பாடசாலையிலும், தென்மராட்சியில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும், தீவகத்தில் துயிலும் இல்லம் அருகில் உள்ள சாட்டி தேவாலயத்திலும் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறும்.

**போக்குவரத்து ஒழுங்குகள்**

துயிலும் இல்லம் செல்பவர்களுக்கான வாகன ஒழுங்குகள் அவ்வப் பிரதேசத்தின் முக்கியமான இடங்களில் ஒழுங்கு செய்யப்படும். ஏனைய மாவட்டங்களில் உள்ள (வன்னி) துயிலும் இல்லங்களுக்கு செல்லுகின்ற பெற்றோர், உரித்துடையோர்களுக்கான வாகனங்கள் ஒவ்வொரு கோட்ட அரசியல் துறை செயலகங்களின் முன்பாகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வைமன் வீதி, நல்லூரில் உள்ள யாழ். - நல்லூர் செயலகம் முன்பாகவும், சீரணி வீதி - சண்டிலிப்பாயில் உள்ள வலி.மேற்கு செயலகம் முன்பாகவும், பருத்தித்துறை வீதி - நீர்வேலியிலுள்ள வலி.கிழக்கு செயலகம் முன்பாகவும், மத்திய கல்லூரி வீதி - வதிரி, நெல்லியடியில் உள்ள வடமராட்சி செயலகம் முன்பாகவும், ஏ-9 பிரதான சாலை, சங்கத்தானையிலுள்ள தென்மராட்சி செயலகம் முன்பாகவும், பெருங்குளம் கோயில- வேலணையிலுள்ள தீவகச் செயலகம் முன்பாகவும் வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வெளிமாவட்டங்களில் இருந்து (வன்னி) யாழ்.மாவட்டத்தின் துயிலும் இல்லங்களுக்கு வரும் பெற்றோர், உரித்துடையோர் தங்குவதற்கு,

கோப்பாயில் ஆசிரியர் பயிற்சி கலாசாலையிலும், எள்ளங்குளத்தில் உடுப்பிட்டி அப்பா பாடசாலையிலும், கொடிகாமத்தில் திருநாவுக்கரசு மகாவித்தியாலத்திலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**தேசிய நாள் மாலை நிகழ்வுகள் (27.11.2002)**

மாவீரருடைய பெற்றோர், உரித்துடையோர் பாண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன், ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்களினுள்ளும் அழைத்துச் செல்லப்படுவர். அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர் நினைவுரை இடம்பெறும். நினைவுரை நிறைவுபெற்றதும், சரியாக 6.05 மணிக்கு அனைத்துத் துயிலும் இல்லங்களிலும் வழிபாட்டுத் தலங்களிலும் ஒரு மணித்துளி நேரம் மணி ஒலிக்கப்படும்.

உயிர்காப்புப்பணியில் ஈடுபடுகின்ற ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்வு தொடங்குவதற்கு ஏற்றவகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்பட வேண்டும். மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் சரியாக 6.06 மணிக்கு மாவீரர்களுக்காக ஒரு மணித்துளி நேரம் அகவணக்கம் செலுத்தப்படும்.

இந்நேரம் துயிலும் இல்லங்களிலும் ஏனைய மக்களின் வாழ்விடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் அனைவரும் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

அகவணக்கம் நிறைவுற்றதும் சரியாக 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படும். இவ்வேளை வீடுகள், ஆலயங்கள், பொது இடங்களில் அனைத்து மக்களும் சுடர் ஏற்றி மாவீரரை நினைவு கூருவர். மாவீரர் துயிலும் இல்லங்களில் 1995ஆம் ஆண்டின் பின் மாவீரர் ஆனவர்களின் கல்லறைகள், நினைவுக் கற்கள் இல்லாத மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர்களுக்கான பொதுச்சுடர் - துயிலும் இல்லத்தின் பிறிதொரு இடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து மக்களாலும் உணர்வு பூர்வமாக நிகழ்த்தப்படுகின்ற இச்சுடரேற்றும் நிகழ்வானது விடுதலைப்பாதைக்கு உறுதியையும் உணர்வையும் கொடுத்து நிற்கும்.

மாவீரர்களின் நினைவாக மாவீரரின் கல்லறை அருகே வைக்கப்பட்டுள்ள பழமரக்கன்று களை மாவீரரின் பெற்றோர், உரித்துடையோர் எடுத்துச் சென்று இந்நாளின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் வீடுகளில் நடுகை செய்து பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

மயிலிட்டித்துறையைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி 26ஆம் திகதி காலை 9 மணிக்கு-வியாபாரி மூலையில் தற்காலிகமாக இயங்கும் மயிலிட்டித்துறை, கடற்றொழிலாளர் சங்கம் அமைந்துள்ள பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மயிலிட்டித்துறையைச் சேர்ந்த அனைத்து மாவீரர்களின் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### இலங்கை வங்கி தலைவராக சுனி முனசிங்க

(கொழும்பு)

இலங்கை வங்கியின் புதிய தலைவராக திருமதி சுனி முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஜனவரி முதலாம் திகதியலிருந்து கடமையாற்றுவர் என்பதும் தெரிவிக்கப்படுகிறது.

பொறியியலாளரான திருமதி முனசிங்க பல நிறுவனங்களின் பணிப்பாளராக உள்ளார்.


இலங்கை வங்கியின் தலைவராக இருந்த ஹென் பாலேந்திரா வெளிநாட்டுக்குச் சென்றபடியால் அவரின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மோட்டார் சைக்கிளிடையே நாய் பாய்ந்து இருவர் காயம்

(கொழும்புத்துறை)

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த கணவனும், மனைவியும் நாய் ஒன்று வீதிக்குக் குறுக்கே பாய்ந்து, விபத்தை ஏற்படுத்தியதால் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மேற்படி சம்பவத்தில், ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த மயிலங்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் முத்தையா பாலேந்திரன் (வயது 52) சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை பாலேந்திரன் பாலவதனி (வயது 42) ஆகிய இருவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (60)



# இலக்கியச் சோலை

## A-9 என நீளும் நினைவுகள்




பகுதி ஏழு

'நித்திகைக்குளம்' நீறிற்று... அன்றைக்கு
நெற்றிக் கண்ணைத் திறந்த சிவன்களால்
பற்றி எரிந்ததலம்பில்.. கழுத்தினில்
பாழும் நஞ்சை அணிந்த அரண்களால்
சத்தமிட்டுமே... "**A-1** தளமதும்
சாய்ந்த" தென்றனர்! "அன்பு வழி" யென
கத்தி தூக்கியோர்...,இரத்தத்தைக் காட்டாமல்
கத்தியை வீசி விட்டுப் பறந்தனர்

அந்நியர்களை ஓட்டித் துரத்திட்ட
அரசியலோடெழுந்தனர் 'கானகர்'.
'மண்ணை விற்பவர் - மன்னவர் ஆகிடும்'
மடமை தீய்க்கத் துணிந்தனர் 'ஈகர்கள்'
அன்று **A-9** அடிமையாய்த் தூங்கிட
அயல் வனத்தில் உலோகப் பறவைகள்
குந்தி எழுந்து தென் திக்குக்குப் போயின!
குதித்த அந்நியர்... மூட்டையைக் கட்டினர்.

எங்கள் தாயக மண்ணினை மூடிய
இருள் கலைந்து விலகத் தொடங்கிற்று.
எங்கள் மூச்சுத் திணறப்.., பெருகிய
இரத்த கங்கை வடிந்தே அகன்றது
எங்கள் காற்றில் விலங்கிட்ட 'அந்நியம்'
இடிவிழுந்ததால்... வள்ளத்தில் ஏறிற்று.
எங்கள் 'வல்லமை' எங்களின் திக்கெலாம்
இனிமை தோன்றத் திரும்பியே வந்தது.

- ஜெயங்கொண்டான்



யாழ்.கல்வியியல் கல்லூரியில் நடந்த முத்தமிழ் விழாவில் அரங்கேறிய குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "நரகமொடு சுவர்க்கம்" நாடகத்தின் ஒரு காட்சி

(படம் - து.கிருபாகரன்)

# உள்வெளி

இலங்கைக் கலைக்கழகம், தமிழ் இலக்கியக்குழு, கலாசாரத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், 'ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத் தரங்கும் கலை நிகழ்ச்சிகளும்' சென்ற 15, 16, 17 ஆம் திகதிகளில், யாழ்.பல்கலைக்கழக 'கைலாசபதி அரங்கில்' நடைபெற்றன.

வருட முடிவிற்கிடையில், ஒதுக்கப்பட்ட பணத்திற்குரிய செயற்பாடுகளைச் செய்துவிட்டதாகக் காட்டமுயலும் 'திணைக்கள நடைமுறை' யினையே, இக்கருத்தரங் கிலும் காணமுடிந்தது; அதனால் 'அவசரக் கோலமும் அரை குறைத்தன்மை'யும் நிகழ்ச்சிகளில் தெரிந்தன.

தமிழ் இலக்கியக் குழுத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம் தனது தலைமை உரையில், "...இந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்கு முதலில் 3,25,000 ரூபா ஒதுக்கப்பட்டது; கருத்தரங்கினை நடத்துவது தாமதமாகியதில் பின்னர் 1,25,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டது; இப்போது 60,000 ரூபாவுடன் மட்டும் இங்கு வந்துள்ளேன். கலைக்கழகத் தலைவர் பேராசிரியர் 'அனுராதா செனிவிரத்ன', எப்படியும் இக்கருத்தரங்கு இவ்வருட இறுதிக்குள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியதாலேயேதான் இதனை ஒழுங்கு செய்தேன்"எனத் தெரிவித்தார்.

கருத்தரங்கை நடாத்துவதில் தாமதம் ஏற்பட்டால் ஒதுக்கீட்டுத் தொகையினைக் குறைக்கத்தான் வேண்டுமா? 'சிங்கள இலக்கியக் குழு'விற்கென்றால் இவ்வாறு நடந்திருக்குமா? ஏற்கனவே 'தேசிய இலக்கிய விழா'வில் சிங்களத்திற்கு பதினெட்டுப் பரிசுகளும் தமிழிற்கு ஏழு பரிசுகளும் வழங்கப்பட்ட பாரபட்சம் நிகழ்ந்திருக்கிறது. தமிழ் இலக்கியக் குழு அநீதிகளிற்கு எதிரர்கக் குரல் கொடுக்க வேண்டும்!

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் அனுராதா செனிவிரத்ன, பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு, கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ், கலாநிதி துரை மனோகரன், தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், கலாநிதி க. குணராசா, செம்பியன் செல்வன், கலாநிதி கு.சோமசுந்தரம், காலாநிதி எம்.ஏ.நு.்.மான், அந்தனி ஜீவா, மேமன்கவி, கலாநிதி க.சிதம்பரநாதன், பேராசிரியர் சி.மௌனகுரு, அஷ்ரப்கான், க.இரகுபரன், டொமினிக்ஜீவா ஆகியோர் வரவேயில்லை!

இதனால், கலாநிதி செ. யோகராசாவும், சு.முரளீதரனும் தனித்தனியாக மூன்று ஆய்வுரைகளை நிகழ்த்தவேண்டி ஏற்பட்டது; பேராசிரியர் சி. தில்லைநாதன், நந்தி, முருகையன் ஆகியோர் திடீர்த் தலைமை உரைகள் ஆற்றவும் நேரிட்டது.

பெரும்பாலும் அறுபது எழுபது பேர் வரையில் தான் பார்வையாளராக மண்டபத்தில் காணப்பட்டனர்; அந்த விதத்தில் பொது மக்கள் ஆதரவு போதியதாக இருக்கவில்லை. சென்ற மாதம் தான் "மானுடத்தின் தமிழ்க்கூடல் - 2002" மிகப் பிரமாண்டமானதாய், மிகச் சிறப்புடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்விலும் ஈழத்துச் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் என்பன ஆராயப்பட்டன. தமிழ் இலக்கியக் குழுவினர் கொஞ்சமேனும் பொதுப் புத்தியைப் பிரயோகித்திருந்தால், இக்கருத் தரங்கினை இம்முறை யாழ்ப்பாணத்திலல்லாது பிறிதொரு தமிழ்ப்பிரதேசத்தில்- வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகியவற்றில் ஏதோ ஓர் இடத்தில் - நடாத்தியிருக்கலாம்; அது பொருத்தமானதாக அமைந்திருக்கும்! அடுத்த வருடத்தில் இத்தகைய நிகழ்வை - உரிய ஒழுங்குகளுடன் - யாழ்ப்பாணத்தில் நடாத்தியிருக்கலாம்!

கவிதை, நாவல் பற்றி செ.யோகராசாவும், 'முஸ்லிம் வாழ்வியல் சார்ந்த நாவல் பற்றி' மருதூர்க் கொத்தனும், நாடகம் பற்றி க.ஸ்ரீகணேசனும் நிகழ்த்திய ஆய்வுரைகள் சிறப்பானவையாக இருந்தன.

செ.யோகராசா 'நாவல்' பற்றி தனது ஆய்வின் இறுதிப் பகுதியில் கவனத்தில் கொள்ள வேண்டியனவாகக் குறிப்பிட்டவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

"எமது நாவல்கள் வெறுமனே ஆவணப்பதிவுகளாக உள்ளன. கதை கூறும் முறை மாறவில்லை. 'பிரதேச நாவல்களும்' அப்படித்தான்; நீல பத்மநாபனின் படைப்புகள் போல் இல்லை. நாவலுக்குரிய விவரண மொழி, நின்று நிலைக்கக் கூடிய பாத்திரங்கள் உருவாக்கப்படவில்லை. எம்மிடையே உள்ள நாவலாசிரியரில் ஒரு 'கலைஞன்' இல்லை! படைப்பாற்றல், அனுபவ ஊறல், விமர்சன வளர்ச்சி எம்மிடமில்லை. பகுதி நேர எழுத்தாளரால் ஆழமாகச் செயற்பட முடியாது. பரந்த வாசிப்பு இன்மை, நூல் வெளியீட்டுப் பதிப்பகங்கள் இன்மை ஆகியவையும் வளர்ச்சியைத் தடுக்கின்றன"

ஈழத்தின் சிறந்த எழுத்தாளரில் ஒருவரான 'மருதூர்க் கொத்தன்' தெரிவித்த கருத்துக்களிற் சில:

"ஓர் எழுத்தாளனின் படைப்பு, அனுபவங்களினதும் வடிவங்களினதும் கலாதரிசனம். இவற்றின் மூலம் படைப்பாளனின் படைப்பாற்றல் கண்டு கொள்ளப்படுவது அவசியம். 'பொருள்' மட்டுமல்ல; படைப்புப் பரிமாணம், கலாபரிமாணம், படைப்பாற்றல் முக்கியம்.

.... முஸ்லிம் இலக்கியம் என ஒன்று இல்லை. உருது இலக்கியம், பார்சி இலக்கியம் போல் 'தமிழ் இலக்கியமே' உண்டு. முஸ்லிம்களால் எழுதப்படுவதால், முஸ்லிம் வாழ்வைப்பற்றி எழுதப்படுவதால் 'முஸ்லிம் நாவல்' என்று சொல்ல முடியாது!"

சோ.பத்மநாதன், அல் அஸூமத், சி. தில்லைநாதன், மருதூர்க் கொத்தன், சொக்கன், தாமரைச்செல்வி ஆகியோரின் கருத்துரைகள் கவனத்திற்குரியவை.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்குச் செல்ல முடியவில்லை. ஏ.ஜே. கனகரத்தினா, மருதூர்க் கொத்தன், முருகையன், திமிலைத் துமிலன், தாமரைச் செல்வி, கே.கணேஷ் (இவர் சமூகமளிக்கவில்லை) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். ஒவ்வொருத்தருக்கும் பரிசுச் சின்னமும் 5000/- ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்பட்டு, பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

இது பாராட்டத்தக்க செயல்தான்!

- சூரி -

## இலக்கிய சோலைக்கு வளம் சேர்க்க...

இலக்கிய ஆர்வலர்களே!

உங்களிடம் இருந்து கருத்துக்களையும், ஆக்கங்களையும் "நமது ஈழநாடு" எதிர்பார்க்கின்றது.

"நமது ஈழநாடு"
இலக்கியச் சோலை

இல.267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் அனுப்பிவையுங்கள். தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

# வேர் கொள்ளல்

**சிறுகதை**

**சுழிபுரம் த.பிரபாகரன்**

சில்லென்று தண்ணீர் பட்டதும் உடல் ஒருமுறை சிலீர்த்துக் கொண்டது. மனம் முழுக்க மகிழ்ச்சியால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இருக்காதா? ஏழு வருசத்துக்குப் பிறகு சொந்த ஊருக்குப் போவதென்றால் சும்மாவா?

பறாளாய் முருகன் கோயில்..

அந்தப் பரந்த பச்சை வயல் வெளி...

திருவடிநிலைக் கடல்...

மாலையில் நானும், சிநேகிதர்களும் சேர்ந்து நின்று பம்பலடித்துக் கொண்ட 'ஐயர்கடை'....

எல்லாமே மனக்கண்ணில் அடிக்கடி படமாய் புகுந்து ஒரு இன்ப இம்சையை எனக்குள் ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

'ம்! இதெல்லாத்தையும் பாத்து எத்தினை வருசமாச்சு!இப்ப என்ர ஊர் எப்படியிருக்கும்? கட்டாயம் முந்தின மாதிரி இருக்காது! 'அவங்கள்' இருந்த இடம் ஊர் மாதிரியே இருக்கும்? சுடுகாடாயெல்லோ மாறியிருக்கும். எண்டாலும்...ஊருக்குப் போனா பச்சைத்தண்ணியைக் குடிச்சிட்டுக் கூட உயிர் வாழலாம்'

எனக்குள்ளே ஏகப்பட்ட எண்ணக்குவியல்கள்!

ஊருக்கு இவ்வளவு கெதியாய்ப் போவேனென்று உண்மையில் நான் கனவில் கூட நினைத்திருக்கவில்லை! ஏதோ காலங் கடக்க முதல், கடவுள் கண்திறந்திருக்க வேண்டும். அதனாற்தான் இப்போது எல்லாமே கனிந்து வந்திருக்கின்றது.

முன்பும் ஊருக்குப் போக வசதியிருந்தது.

“நாங்களும் ஊருக்குப் போவமப்பா! போனமாசம் இஞ்சையிருந்து, குருநகர்க் கடலுக்குள்ளால ஊருக்குப் போன தவமண்ணை எங்களையும் வரச்சொல்லிக் கடிதம் போட்டிருக்கிறார்.” என்று என் மனைவி ரஞ்சனா எத்தனையோ தரம் சொல்லியும் நான் போக முடியாது என்று ஒரேயடியாக மறுத்துவிட்டேன்.'அவங்கள்' இருக்கின்ற இடத்தில் போய் வாழ்வதென்பது மிகப் பயங்கரமானதாக எனக்குப்பட்டது. இதனாற் தான் இதுவரை ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி அங்கு செல்வதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன். என்றாலும் மனதின் மூலை முடுக்கெங்கும் என்னூரைப் பார்க்க வேண்டும் என்ற அந்த ஆசை விஸ்வரூபம் எடுத்து நிறைந்திருந்தது. இப்போது 'ஒலிவ்' கிளைகளின் வாசம் பட்ட வரத்தினால் அடைபட்ட பாதையின் திறப்பும், போக்குவரத்து வசதியும், மாறிப்போன பேரினத்தின் மனப் போக்கும், என் சொந்த ஊரைத் திரும்பப் பார்க்கப் போகின்றேன்.

“கிணத்தடியில் நிண்டு மினக்கெடாமல் கெதியா வாங்கோப்பா! தேத்தண்ணி ஆறுது!”

ரஞ்சனா குசினிக்குள்ளிருந்து குரல்கொடுத்தாள்.

அவள் குரல் செவிப்பறையில் நுழைந்ததும், கைகளுக்கு இயந்திரத் தனத்தைக் கொடுத்து, 'என் முகங்கழுவும் படலத்தை' முடித்துக் கொண்டு திரும்பியபோது-

தன் பச்சைத் தலைமயிரை காற்றில் அசையவிட்டபடி சூரியக் குளியல் செய்து கொண்டிருந்த தென்னை, கண்களை ஈர்த்தது.

அந்த தென்னை இங்கு வந்து வளர்ந்ததே ஒரு கதைதான்!

இன்னமும் எனக்குள் அந்த நினைவுகள் செத்துப்போய்விடவில்லை.

எனது மகன் வினோத் என்னையே உரித்து வைத்துப் பிறந்திருந்தான்.

“தேப்பனைப்போல பிள்ளை பிறந்தா தேப்பனுக்குக் கூடாது! பிள்ளைக்கும் கூடாது! முதல்ல பிள்ளையை ஏதாவது கோயில்ல வித்து வாங்கு!”

என்று யாரோ ஒரு 'அனுபவப் பழம்' ரஞ்சனாவின் காதில் ஓதிவிட, அவள் அதையே வேதவாக்காகக் கொண்டு, பிள்ளையை விற்று வாங்கும் சடங்கினை நிறைவேற்றக் களத்தில் இறங்கினாள். அதில் முதற்பலி நான்தான்!

“இஞ்சேருங்கோப்பா! உந்தப் பிறாளாய்ப் பிள்ளையார் கோயில் ஐயரிட்டப் போய் எப்ப பிள்ளையை வித்து வாங்கலாமெண்டும், என்னென்ன சாமான் வாங்க வேணுமெண்டும் கேட்டுக்கொண்டு வாங்கோ!”

“ரஞ்சனா! உந்தப் பிள்ளையை வித்து வாங்கிறதெண்டது கிழடு கட்டையின்ர விசர் வேலை! நீ பேசாமல் கிட! எனக்கும் அவனுக்கும் ஒண்டும் வராது. பழைய பஞ்சாங்கங்கள், அறளை பேந்துபோன நேரத்தில் ஏதோ பிசத்தினா, உனக்கு மூளை இல்லையோ?

“இப்ப நீங்கள் போய் கேட்டுக் கொண்டு வரப் போறியளோ? இல்லாட்டி நான் போய்க் கேட்டுக் கொண்டு வரட்டோ?”

“சரி! நான் சொல்லி நீ கேக்கவே போறாய்? போய்க் கேட்டுக் கொண்டு வாறன்!”

கோயிலுக்குப் போனபோது வாசற் கதவைப் பூட்டிவிட்டு அப்போது தான் ஐயர் வெளியே வந்து கொண்டிருந்தார்.

“ஐயா!”

“ஆர்? எட! நீரோ! என்ன பொழுது சாஞ்ச நேரத்தில இந்தப் பக்கம்”

“இல்லை ஐயா! என்ர பிள்ளையை வித்து வாங்க எப்ப கோயிலுக்கு வரலாமெண்டு கேக்க வந்தனான்”

நான் கேட்டதும், ஐயர் ஏதோ அப்துல்கலாம் அணுகுண்டு கண்டு பிடிக்க யோசித்தது போல், அவசரமாய் விழிகளை அங்குமிங்கும் உருட்டினார். தலையை வேகமாக ஆட்டினார்.

கை விரல்களை எடுத்து, மடக்கி, 'நேர்சரிப்பிள்ளை போல' கணக்குப் பார்த்தார்.

“வாற புதன்கிழமை நல்ல நாள்! அரிச்சினைச் சாமானும், வித்து வாங்க ஒரு தென்னம்பிள்ளையும் கொண்டந்தாக் காணும். ஆங்! மற்றது தாய்மாமனைக் கட்டாயம் கூட்டியாங்கோ! அவர் பிள்ளையை உங்களிட்டையே வாங்கி, உங்களுக்கே வித்தால் தான் உரிய பலன் கிடைக்கும்!”

நான் கேட்காமலேயே என்னென்ன சாமான்கள் கொண்டு வருவது என்று சொல்லிய ஐயரை மனதிற்குள் வாழ்த்தினேன்!

புதன்கிழமை வந்தது.

ஐயர் சொன்ன மாதிரி அர்ச்சனைச் சாமான்களும், தென்னம்பிள்ளையும் தயார்! இனிக் கோயிலுக்குப் போகவேண்டியது தான்!

அப்போது தான் -

ஊர் நடுங்கியது.

கந்தகப் புகையின் நெடி, சூழலைக் கவ்விக் கொண்டது.

வானத்தில் குண்டுகளைச் சுமந்தபடி வல்லூறுகள்!

ஊரோட - ஒத்தோடினோம். ஓடினோம். புதுக்குடியிருப்புக்கு வந்து, இந்தக் காணியை வாங்கி, கொட்டில் போட்டு இருக்கும் வரைக்கும் ஓடுதல் என்பதே எங்களின் இயல்பாய் போனது.

உயிரோடு சேர்த்துச் சுமந்து கொண்டு வந்திருந்த சாமான்களை இறக்கியபோது - கோயிலுக்குக் கொண்டு செல்ல வைத்திருந்த தென்னம்பிள்ளை!

“பார்த்தீங்களே ! இந்தச் சண்டையால பிள்ளையை வித்து வாங்குறதை நாங்கள் மறந்தாலும் கடவுள் மறக்கேலை! முதல்ல இஞ்ச எங்கையாவது ஒரு கோயில்ல பிள்ளையை வித்து வாங்கோணும். தெய்வக் குற்றம் பொல்லாதது!”

“ச்சீ! சும்மா கிட! செத்தவங்களையே எரிக்கேலாமல் சனம் அந்தரப்பட்டுத் திரியுது. நீயென்னெண்டால் விக்கிறன் வாங்கிறனெண்டு விசர்க்கதை கதைக்கிறாய். அதொண்டும் வேண்டாம்! என்ன நடக்கோணுமோ அது நடக்கட்டும்.”

சொன்னதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தென்னம்பிள்ளை இருந்தாற்தானே இவளுக்கு விற்று வாங்கும் ஞாபகம் வரும்? கிணற்றடியில் கிடங்கு வெட்டி, தென்னம்பிள்ளை நட்டு, நிமிர்ந்த போதுதான் எனக்கு நிம்மதி வந்தது.

இப்போது வினோத்துக்கு எட்டு வயதாகிறது. தென்னையும் குரும்பை கட்டத் தொடங்கிவிட்டது.

“உங்களை எத்தினை தரம் கூப்பிடுறது? கெதியாய் வாங்கோ வன் உங்களைத்தேடி மகேசண்ணை வந்திருக்கிறார்.”

நான் முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்த போது, வீட்டு முன் திண்ணையில் மகேசனும், இன்னுமொருவரும் அமர்ந்திருந்தனர் மூவருக்கும் ரஞ்சனா தேநீரோடு வந்தாள்.

“வினோத் எழும்பிட்டானோ?”- இது நான்.

“இல்லை! இனித்தான் எழும்புவான்”

ரஞ்சனா போய்விட்டாள்.



“அப்ப மகேசன் காணி அலுவல் என்ன மாதிரி?” “அதெல்லாம் சரியண்ணை! இவர் தான் வாங்கப் போறார். நீங்கள் கேட்ட தொகைக்கு ஓமாம்.

ஆனால்.......”

“ஆனால்.............?”

“இந்தக் கொட்டிலையும் வளவோட சேத்துத்தரட்டாம்!”

மகேசன் கொஞ்சம் தயக்கமாகக் கேட்டதும், நான் கண்களை ஒரு மாதிரியாய்ச் செருகவிட்டு, மூளையின் செயலைத் துரிதப் படுத்தினேன்.

'எல்லாச் சனமும் ஊருக்குப் போற அவசரத்தில் ஆப்பிட்ட விலைக்கு நிலங்களை வித்திட்டுப் போகுதுகள். மகேசன் கூட்டியந்த ஆளைவிட்டா இன்னொருத்தன் நிலத்தை வாங்க எப்பெப்ப வாறானோ தெரியலை. அதைவிட கொட்டிலையும் சேத்துக்குடுக்கிற தாலை ஒண்டுங்குறைஞ்சு போகாது'

மனம் கணக்கிட்டு முடிந்ததும், சரியென்று தலையாட்டினேன்.

“அப்ப நாங்கள் போய் புறக்கிறாசியாரைக் கூட்டிக்கொண்டு காசையும் எடுத்துக் கொண்டாறம்”

மகேசனோடு வந்தவன் இப்போது தான் முதன் முறையாய் வாயைத் திறந்தான்.

“சரி! வர, எவ்வளவு நேரஞ் செல்லும்?”

“ஒரு ரண்டு மணித்தியாலத்தில வந்திடுவம்!”

அவர்கள் இருவரும் வெளியேறிச் சென்ற, கொஞ்ச நேரத்தில் படலையடியில் இருமிக்கொண்டு லான்ட் மாஸ்ரர் வந்து நின்றது.

“ஏனப்பா இண்டைக்கு லான்ட் மாஸ்ரரை வரச் சொன்னனியள் நாளைக்குத் தானே வெளிக்கிடுறம்”

லான்ட்மாஸ்ரரைக் கண்டதும் ரஞ்சனாவின் கேள்வி இது.

“இல்லையப்பா! சாமாங்களோட நாளைக்குப் போறது கரைச்சல். அதுதான் இண்டைக்குச் சாமானை அனுப்பிப் போட்டு நாங்கள் நாளைக்கு வெளிக்கிடுவம்!”

“ஏதோ உங்கடபாட்டுக்கு மற்றவைக்கு ஒண்டுஞ் சொல்லாமல் கொள்ளாமல் என்னவோ செய்து முடியுங்கோ?”

ஆற்றாமையோடு அவள் நகர, நானும், லான்ட்மாஸ்ரர்க்காரனும் ஒரு மணித்தியாலமாய், அசுரத்தனமாய் இயங்கியதன் பலனாய் - ஒரு மாதிரியாய்ச் சமான்களெல்லாம் லான்ட்மாஸ்ரர்ப் பெட்டியில் குந்திக் கொண்டன. சட்டென எனக்குள் வினோத்தின் எண்ணம்!

“ரஞ்சனா! வினோத் இன்னும் எழும்பேலையோ?”

“இல்லை! அப்போதையே எழுப்பிவிட்டிட்டன் முகங்கழுவக் கிணத்தடிக்குப் போனவன். அதுக்குப் பிறகு ஆளின்ர சிலமனைக் காணேலை!”

கிணத்தடிக்கோ?!

ஒரு விபரீதத்தை எதிர்பார்த்தவாறு வேகமாகக் கிணற்றடிக்கு ஓடினேன்!

அப்பாடா!

அவனுக்கொன்றுமில்லை!

என்றாலும் ஏதோ ஒன்றை இழந்துவிட்டாற் போன்ற துயரம் அவன் முகத்தில் ஒட்டியிருந்தது.

“வினோத்! என்னப்பு பிள்ளையின்ர முகம் ஒரு மாதிரிக் கிடக்குது!”

“இல்லையப்பா! நாங்கள் யாழ்ப்பாணம் போனா எங்கட வளவு, கிணத்தடி, வீடு, தென்னம்பிள்ளை இதுகளையெல்லாம் கனநாளைக்குப் பாக்கேலாதப்பா! அதுதான் எல்லாத்தையும் ஒருக்கா வடிவாப் பாக்கிறன் அப்பா. இனி எப்ப இஞ்ச திரும்பி வருவம்!”

“திரும்பி வாறதோ? ஏன் வர வேணும்? சொந்த ஊருக்குப் போனா இனியேன் வரப்போறம்!”

“சொந்த ஊரோ? இது தானேப்பா எங்கட ஊர்!”

“இல்லையப்பு! எங்களுக்கு யாழ்ப்பாணந்தான் சொந்த ஊர்! பிரச்சனையால அங்க இருக்கேலாதெண்டு இஞ்ச ஓடியந்தம்! அங்க போனா இனி இஞ்சவர மாட்டம்”

“வரமாட்டமோ? இனி இஞ்ச வரமாட்டமோ?”

“இல்லை! வரமாட்டம்”

“அப்ப எங்கட வீடு, வளவு, கிணறு, தென்னம்பிள்ளை, பூக்கண்டுகள் இதுகளை அங்க கொண்டு போவமோ?”

எட்டுவயது மகனின் கேள்விக்கு விடைசொல்வதற்குள் எனக்கு முழி பிதுங்கி விட்டது!

“நீ சொன்ன எல்லாத்தையும் கொண்டுபோக ஏலாது. கிணறு இஞ்ச நிலத்தில வெட்டினது. அதைக் காவிக்கொண்டு போகேலுமோ? அது இஞ்சை தான் இருக்கவேணும்! உந்த வீடு, தென்னம்பிள்ளையும் அப்பிடித்தான்!”

“ஏனப்பா! தென்னம்பிள்ளையை யாழ்ப்பாணத்தில இருந்து தானே கொண்டந்ததெண்டு சொன்னீங்கள்! இப்ப ஏன் திரும்பவும் கொண்டு போகேலாது?” “அது வந்து....... அதப்பு இஞ்ச கொண்டு வரேக்க அது சின்னன்! வேர்கூட வடிவா விடேலை! இப்ப அது இஞ்சை வேர்விட்டு பெரிசா வளந்திட்டுது! இனிப் பிடுங்கிக் கொண்டு போய் நட்டால் அது பட்டுப் போகும்!”

இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, சட்டென எனக்குள் பொறிதட்டியது. ஒரு உண்மை புரிந்தது போல மனம் திருப்திப்பட்டுக் கொண்டது. ஏதோ அரவம் கேட்டுத் திரும்பினேன்!

மகேசன் வந்து கொண்டிருந்தான்!

“அண்ணை! எல்லாம் ஆயித்தம்! புறக்கிறாசியாரும் வந்திட்டார்”

நான் மெதுவாய் அவனை நோக்கி, உதடுகளைப் பிரித்தேன்!

“இல்லை மகேசன்! நான் நிலத்தை விக்கேலை! நாங்கள் திரும்பிவரும் வரை இந்த நிலத்தை நீ கவனிச்சுக்கொண்டிரு. குறை நினைக்காமல் நிலத்தை வாங்க வந்த ஆளையும், புறக்கிறாசியாரையும் திரும்பிக்கொண்டு போயிடு!”

நான் சொல்லச் சொல்ல மகேசன் ஒன்றும் புரியாது நின்று கொண்டிருந்தான்.

✻

## கார்த்திகை மழை



*மழைக்காலம் வந்தாலென் மனதுக்கு மிகப்பிடிக்கும்*
*இலை தழைகள் எல்லாம்*
*இளகிக் குளிர்ந்துறைய*
*வெளிச்சமும் இருளும் விவாகம் புரிந்திருக்கும்.*
*அழுக்கையெல்லாங் கழுவும்*
*அந்த வேலைக்காரியைப்போல்*
*மழை வந்தெம் மண்ணின் 'மலங்களினைக்' கழுவிப்போம்*
*குளிரூட்டப்பட்ட காற்று*
*போர்வைக்குட் குறண்டவைக்க*
*குளிரைக் கரமுரஞ்சிக் குட்டிக் கலைத்துவிட்டு*
*வெளி ஜன்னற் கண்ணாடி*
*மேடையிலே நடனமிடும்......*
*துளிகளினை நீயும் நானும் கணக்கெடுப்போம்.*
*மழையின் மகோன்னதத்தை வர்ணிப்போம்.*
*சுடுதேநீர்*
*சிலநேரம் நீதருவாய்*
*குடித்துக் குளிர்சிதைப்போம்.*
*ஒழுக்குத் துளி சிதறி ஒருசீராய் முத்தமிட*
*எழுந்து விலகாமல் துளித்தொடலில் மெய்சிலிர்ப்போம்*
*மழையினது நாதம்.*
*மழையினது மென்குளுமை.*
*மழையினது தூய்மை.*
*மழையின் பின் வருமௌனம்.*
*மழையினது என்னென்று வர்ணிக்க முடியாத*
*இயல்புகளில் நானும் பரவசித்தல் போல்....நீயும்*
*பரவசிப்பாய் நண்பா!*

*இந்த முறை பரவசிக்க*
*நீயில்லை இங்குன் நிழலில்லை.*
*ஆனால் நீ*
*'கார்த்திகை நாள்' தீபத்தில் கண்திறப்பாய் என்பதிலே*
*எனக்கையம் இல்லை!*
*இன்று மழை பெய்யுதுதான்.....*
*எனினும் மனதிற் பழைய இனிமையில்லை!*
*வருங்கால மழைக்கால்ம்...... இறந்தகாலத்தைப் போல*
*வரப்போவதில்லை!*
*ஏனெனில் நீ அருகிலில்லை.*

**த.ஜெயசீலன்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

- திருக்குறள்.

## நமது நோக்கு

# பங்கேற்க வாருங்கள்!

மிகப்பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ள புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை - உடனடியாகவும், சீராகவும் முன்னெடுத்துச்செல்ல வல்லதான நிர்வாகக் கட்டமைப்பொன்று இன்று அவசியமானதாகியுள்ளது.

ஒரேநேரத்தில் பல்வேறு துறைகள் சார்ந்த, பல அபிவிருத்தி வேலைகளைச் செயற்படுத்துவதற்கேற்ற வகையில் - குழப்பமில்லாத, அதிகாரம் பன்முகப்படுத்தப்பட்ட, பரவலாக்கப்பட்ட அமைப்பின் தேவையும் உணரப்பட்டுள்ளது.

அதேவேளை - செய்யப்படும் பணிகளின் பின்னூட்டலும், மதிப்பீடும் சமகாலத்திலேயே மேற்கொள்ளப்பட்டு - அதற்கேற்றவாறு திட்டங்களில் மாற்றங்களையும், நேரிய தன்மைகளையும் உருவாக்கவேண்டியுள்ளது.

குறுகியகால, நீண்டகால அடிப்படைகளிலான செயற்பாடுகள் வகைபிரிக்கப்பட்டு, இரண்டு நோக்குகளிலுமாக திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஆயத்தங்களும், தயார்படுத்தல்களும் பல்வேறு வழிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் - இவற்றில் சமூகம் சார்ந்த பங்கேற்புப் பற்றியும் விரிவாக ஆராயப்பட வேண்டியதாகின்றது.

தமிழர் தாயகத்தைப் பொறுத்த வரையில் இதுவரை காலமும் மேற்கொள்ளப்படாத பாரிய வேலைத்திட்டங்கள் இனி இடம்பெறவிருக்கின்றன. புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் மக்களைச் சென்றடையவிருக்கின்றன.

இத்தகைய அபிவிருத்தியையும், மீள் கட்டுமானங்களையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும், அவற்றில் நேரடியாகவோ - மறைமுகமாகவோ பங்கேற்பதாகவும் சமூகத்தின் பணி அமையப்போகின்றது.

சமூகத்தின் ஒவ்வொரு கூறுகளுக்குமுள்ள பொறுப்புணர்வும், விலகிச்செல்லாத தன்மையும், அர்ப்பணிப்புடனான பங்கேற்பும் எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பிரதிபலிக்கப்பட்டாக வேண்டும்.

அபிவிருத்திப் பணிகளின் - குறுகிய, நெடுந்தூர இலக்குகள் என்ன?, அதன் சாராம்சம் என்ன? அதற்காகக் கைக்கொள்ளப் படுகின்ற வழிமுறைகள் என்ன? பின்னூட்டலிலும் மதிப்பீட்டிலும் என்ன பங்கு வகிக்கப்போகின்றோம்? என்ற இன்னோரன்ன விடயங்களினூடாக, சமூகத்தின் கூறுகள் தங்கள் பங்கேற்பை நிகழ்த்திச் செல்லலாம்.

எத்தகைய திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தால் மிகப் பயனுடையதாக இருக்கும், தங்களுக்கான உடனடித் தேவைகள் என்ன? போன்ற ஆலோசனைகளையும் அனுபவங்களையும் நிர்வாகக் கட்டமைப்பினருடன் பகிர்வதற்கு மக்கள் முன்வரவேண்டும்.

புத்திஜீவிகள், துறைசார்ந்த நிபுணர்கள், சமூக நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் உட்பட தனியாட்கள் வரை - அபிவிருத்திப் பணிகளைத் தளர்வின்றியும், இலக்கு நோக்கியும் கொண்டுசெல்ல தம்மாலியன்ற அனைத்தையும் செய்யும் கடமையை ஏற்கவேண்டும்.

சமூகத்தின் பூரணமான ஒத்துழைப்பும் ஒருமித்த ஆதரவும் இருந்தால் மட்டுமே - கிடைக்கின்ற அரிய வாய்ப்புக்களை நடைமுறையில் செயலாக்கமுடியும்.

எனவே, எமது சமூகம் முழுவதுமே ஒன்றுபட்டு, ஒரேயணியில் நின்று எமக்கு நேர்ந்த பாதிப்புக்களிலிருந்து மீட்சியுறவும், தேவைகளை நிறைவேற்றவும் ஏற்றதாக - எம்மை தகவமைத்துக் கொள்வோம்.

# இன்று ஆரம்பமாகும் ஒஸ்லோ மாநாட்டில் ரணில், நோர்வே அமைச்சர் தொடக்கவுரை

(ஒஸ்லோ)

இன்று காலை ஆரம்பமாகும் ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜீன் பெற்றர்சன் ஆகியோர் தொடக்கவுரை நிகழ்த்துவர்.

இக்கூட்டத்தின் ஆரம்பக்கட்டமுடிவில் தற்போது நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் சமாதான தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அரசதரப்பு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகள், தமது கருத்துக்களை முன் வைப்பர் எனவும் தெரியவருகின்றது.

கூட்டத்தின் இரண்டாவது கட்டத்திலேயே இலங்கைக்கான வெளிநாடுகளின் உதவிகள் மற்றும் வட-கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

சர்வதேச நாடுகளிடம் இருந்து உடனடி உதவிகளைப் பெறுவது குறித்தும் இந்த மாநாட்டில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன. (01)

## தாதிமார் வேலை நிறுத்தம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கைத் தாதிமார் சங்கம் தங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தினை தற்காலிகமாக கைவிடுவதாக அறிவித்துள்ளது. தங்களது சம்பள ஏற்றத்தாழ்வு தொடர்பான கோரிக்கைகளுக்கு 72 மணி நேரத்தில் அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து, நல்ல முடிவினை தருவதாக சுகாதார அமைச்சர் உறுதிமொழி கூறியதற்கிணங்க - தமது போராட்டத்தினை தற்காலிகமாக கைவிடுவதாக தாதியர் சங்கத் தலைவர் எம்.என்.யுனைற் அறிவித்துள்ளார்.

### வடமராட்சி கிழக்குப் பாடசாலைகளில்

## மலசலகூட வசதிகளுக்கு யுனிசெப் ரூ. 3 லட்சம் ஒதுக்கீடு

(வடமராட்சி)

மருதங்கேணி கல்விகோட்டத்திலுள்ள நான்கு பாடசாலைகளில் 'யுனிசெவ்' உதவியுடன் மலசலகூடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இதற்காக 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கையினால் சேதமடைந்த மலசலகூடங்கள் புனரமைக்கப்படாமையால், மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கினர்.

பாடசாலை சமூகம் விடுத்த கோரிக்கையை அடுத்து ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 75 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, ஆழியவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய நான்கு பாடசாலைகளிலுமே மலசலகூடங்கள் புனரமைக்கப்படவுள்ளன. (ச)

### உதவி வழங்கும் நாடுகள்

## தகவல் பெறவே வெள்ளை அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தாலும் விடுதலைப் புலிகளாலும் மேற்கொள்ளப்படவுள்ள ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய விடயங்களை உதவி வழங்கும் நாடுகளுக்கு தெளிவாக்கவே, வெள்ளை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப் படவுள்ளதாக, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் அறிவித்துள்ளார்.

இந்த வெள்ளையறிக்கையோடு, அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து தயாரித்த புனர்வாழ்வு, புனரமைப்பு உப குழுவின் அறிக்கையொன்றும் உதவி வழங்கும் நாடுகளிடம் வழங்கப்படவிருப்பதாகக் கூறிய அவர் -

குறிப்பிட்ட வெள்ளையறிக்கையில் வட - கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த, போரால் பாதிக்கப்பட்ட நாட்டின் ஏனைய பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

## மாரப்பனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### அடுத்தமாதம் நாடாளுமன்றில்

(கொழும்பு நிருபர்)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் மூன்று மணி நேரத்திற்கு விவாதம் நடாத்தப்படலாமென நாடாளுமன்றத்தில் நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

எனினும் இத்தீர்மானம் பற்றிய முழுமையான விவாதம் ஜனவரி மாதத்திலேயே நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

# கடன்களுக்கான வட்டி வீதத்தை வணிக வங்கிகள் குறைக்க வேண்டும்!

## நிதியமைச்சர் சொக்ஸி கோருகிறார்

(கொழும்பு நிருபர்)

வர்த்தக வங்கிகளுக்கான கடன்களுக்கு வட்டிவீதத்தை மத்தியவங்கி குறைத்துள்ளதை அடுத்து, வர்த்தக வங்கிகளும் பொதுமக்களுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் மத்தியவங்கி, வர்த்தக வங்கிகளின் கடன்களுக்கான வட்டிவீதத்தைக் குறைத்திருந்தது. இதனையடுத்து இலங்கை வங்கியும் டிசம்பர் முதலாம் திகதி வங்கிக் கடன்களுக்கான வட்டிவீதத்தை 2 சதவீதத்தால் குறைப்பதாக அறிவித்துள்ளது.

இதுபோல, ஏனைய வங்கிகளும் தமது கடன்களுக்கான வட்டிவீதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் மூலம் பணவீக்கத்தைக் குறைத்து, வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என நிதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரண்டு அணைக்கட்டுகள் புத்தளத்தில் உடையும் அபாயம்

(கொழும்பு நிருபா)

புத்தளம் பகுதியில் இரண்டு அணைக்கட்டுகளில் உடைப்பு ஏற்படும் என்ற அபாயத்தால் அவற்றின் அவசரகாலக் கதவுகள் திறந்துவிடப்பட்டதால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இங்கினிமிட்டிய, தப்போல ஆகிய அணைக்கட்டுளே திறந்துவிடப்பட்டுள்ளன.

இதனால் இரண்டாயிரம் குடும்பங்கள் தத்தம் சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்திருப்பதாக புத்தளம் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## விவசாயக் குடும்பங்களுக்கு உலக உணவு அமைப்பு உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த விவசாயக் குடும்பங்களுக்கு, விவசாய உள்ளீடுகளை வழங்குவதற்கு உலக உணவு ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உதவ, மீளக்குடியமர்ந்த 495 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட உள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை கமநல சேவைகள் திணைக்களமும் விவாசாய அபிவிருத்தி பிரிவும் மேற்கொண்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி, கைதடி, அம்பன் பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள - சொந்த நிலமுள்ள, வசதிகளற்ற குடும்பங்களை தெரிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (2)

## அநாதரவாக நின்ற சிறுவன் கொடிகாமம் அரசியற்துறையிடம்

### உறவினர்கள் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கொடிகாமத்தில் அநாதரவாக நின்ற சிறுவன் ஒருவன் கொடிகாமம் அரசியற்துறை பணிமனையில் தஞ்சமடைந்துள்ளான்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது - வடமராட்சி கிழக்கு, தாளையடி, வத்தராயனை சொந்த முகவரியாகவும் தற்போது புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த தெய்வேந்திரம் சுதாகர் வயது (14), அவனது தங்கை தெய்வேந்திரம் கௌசி வயது (11) ஆகியோர் கடந்த 20 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களுடன் புதுக்குடியிருப்பில் இருந்து, தனித்தனி மோட்டார் சைக்கிள்களில் யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணம் செய்தபோது, அவர்கள் இந்தச் சிறுவனை கொடிகாமத்தில் இறக்கிவிட்டு சென்றுள்ளனர். தங்கையை தவறவிட்ட நிலையில் இச்சிறுவன் கொடிகாமம் அரசியற்துறை பணிமனையில் தற்போது தங்கியுள்ளான்.

இவரின் தாய் முன்கூட்டியே வடமராட்சிக்கு வந்து விட்டார் என்றும் - இவரது தந்தை தெய்வேந்திரம் என்பவர் இந்தியாவில் சிறைக்கைதியாக உள்ளாரெனவும், இச்சிறுவன் தெரிவித்துள்ளான். எனவே, இவரது உறவினர் யாராவது உடனடியாக கொடிகாமம் அரசியற்துறை பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர். (34)

# தமிழர்களான நாமே தமிழைப் புறக்கணிப்பது எம்மை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமன்!

*மா.க.ஈழவேந்தன், தமிழ்ப்பற்று மிக்கவர், தமிழீழ விடுதலை அணியின் பொதுச்செயலாளர். நாடறிந்த அவர்- வழங்கும் கருத்துக்கள் இவை.*

*கேள்வி:-* இலங்கையில் தமிழ் மொழி நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி என்ன கூற நினைக்கிறீர்கள்?

*பதில்:-* தமிழ் ஆட்சி மொழி என்று எங்கும் பேசப்படுகின்றது, சட்டத்திலும் இடம்பெற்றிருக்கிறது. ஆட்சி மொழியாக தமிழ் வந்தும், பல ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த நிலையிலும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் முறையாகத் தமிழில் கருமங்கள் ஆற்றுவதற்கு வாய்ப்பில்லை.

கொழும்பில் வெள்ளவத்தையிலும் சரி, பம்பலப்பிட்டியிலும் சரி, கல்கிசையிலும் சரி - எந்தப் பகுதியிலும் தமிழ் மொழியில் எங்கள் முறைப்பாடுகளை காவல் நிலையத்தில் பதிவு செய்வதற்கு - எந்த ஏற்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை.

*கேள்வி:-* தமிழை நடைமுறைப்படுத்துவதில் அரச திணைக்களங்கள் எவ்வாறு செயற்படுகின்றன?

*பதில்:-* தமிழை நடைமுறைப்படுத்துவது தமிழன் கையில் இருக்க வேண்டும். சீனி என்று பத்திரிகையில் எழுதும்போது சீனி இனிக்காது. சீனி அங்கே இருக்க வேண்டும். அது போல நடைமுறைப்படுத்துவதற்கு தமிழர்கள் இருந்தால் தான், நடைமுறைப்படுத்த முடியும். கண்டி, நுவரெலியா, பதுளை போன்ற இடங்களில் - தமிழ் ஆட்சி மொழியாக இருந்தாலும் அங்குள்ள அரச திணைக்களங்களில் தமிழில் தொடர்பு கொள்ள முடியாமல் இருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு நான் வந்து மீளக் குடியமர்வதற்குரிய சில பத்திரங்களை நிரப்பினேன். அந்த பத்திரங்கள் எதுவும் தமிழில் இல்லை. அனைத்தும் ஆங்கிலத்தில்தான் இருந்தன. ஆங்கிலத்தில் நிரப்புவதற்கு நான் ஆயத்தமில்லை என்றேன். ஆங்கிலத்தை எதிர்ப்பது எனது முடிவல்ல. தமிழ் ஆட்சிமொழி என்பதாலே ஆங்கிலத்தை எதிர்க்கிறேன். இதனால் இந்த மீளக் குடியமர்விற்குரிய பத்திரங்கள் தமிழில் இருக்க வேண்டும், நாங்கள்




ஆங்கிலத்தில் நிரப்பினால் தான் கொழும்புக்கு அனுப்பி முடிவு எடுக்கலாம் - என்று சொல்வது எனக்குச் செய்யும் உதவியாக இருக்கலாம். இனத்துக்குச் செய்யும் உதவியாகக் கருதமாட்டேன். அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும். யாழ்.அரச செயலகத்தின் எந்தப் பிரிவிலும், தமிழுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் காணமுடியாதது, உண்மையிலே கவலையாக இருக்கிறது. யாழ்ப்பாண மண்ணில், எங்கள் அன்றாடத் தேவைகளை நாம் தமிழில் செய்ய முடியாது விட்டால் என்ன பயன்? இலங்கைக் காவல் துறைத் தலைவர் ஆனந்தராசா சொன்னார், அனைத்துக் காவல் நிலையங்களிலும் தமிழில் முறைப்பாடு செய்வதற்கு கட்டளை பிறப்பித்திருக்கிறோம் என்று. ஆனால் உண்மையில் எந்த நிலையிலும் இது தொடர்கிறது? பிறர் ஏமாற்றுவது ஒருபுறம் இருக்க, தமிழன் தன்னைத்தானே ஏமாற்றுவதால் தான் தமிழில் நிர்வாகத்தை நடத்தத் தயக்கம் பிறக்கிறது. எம்மை நாம் அழித்துக் கொள்கிறோம். மொழி அழிந்து போனால் இனம் அழியும். மொழி ஒரு இனத்தின் விழி மட்டுமல்ல, மொழி ஒரு இனத்தின் உயிர். தமிழை, தமிழ் மக்களை, தமிழர் தாயகத்தைக், காக்கும் போரில் - 65 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களை இழந்தும் பல்லாயிரம் மாவீரர்களை இழந்துமுள்ள நிலையிலும் யாழ்ப்பாண நிர்வாகத்தில் தமிழைக் காணமுடியவில்லை என்றால் ஏற்றுக் கொள்ளக் கூடியதா?

*கேள்வி:-* தமிழர்களே தமிழை நடைமுறைப்படுத்துவதில் தயக்கம் காட்டி வருவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:-* சிங்களத்தை திணிப்பது ஒருபுறம் இருக்க, எமக்குத் தமிழில் செய்ய வேண்டுமென்று உணர்வு இல்லாமல் இருப்பது தான், பிறர் எம்மை அழிப்பதைவிட நம்மை நாமே அழித்துக் கொள்வதாக அமைகின்றது. ஏன் தமிழனுக்கு இந்த மொழியுணர்வு குறைந்துவிட்டது என்பதுதான் என்னை வாட்டி வதைக்கும் கேள்வியாகும்.

*கேள்வி:*தமிழ் மக்களின் வாழ்நிலை பற்றிய உங்கள் கருத்தென்ன?

*பதில்:*இன்று தமிழர்கள், தங்கள் பகுதியில் கூட சுதந்திரமாக வாழ முடியாத தன்மை இருக்கிறது, வாழ முடியாத ஏக்கம் இருக்கிறது. அண்மையில் திருகோணமலைக்குச் சென்றிருந்தேன். அங்கு சொந்த இடங்களிலே பல மக்கள் அகதி முகாம்களில் வாழும் நிலையைக் கண்டேன். சிலர் அகதி முகாமில் 20 வருடங்களுக்கு மேலேயும் வாழ்கிறார்கள். ஒரே பிள்ளையின் பிரசவம், பூப்பு எய்துதல், திருமணம், அப்பிள்ளை குழந்தை பெறல் என்பன ஒரே முகாமில் இடம் பெற்றிருக்கின்றது. எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு ஏக்கம் தருகின்ற முகாம் வாழ்க்கையை எத்தனை மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.

எமக்குத் தெரியும் இது ஏன் நடக்கிறதென்று. குறிப்பாகத் திருகோணமலையில் இவ்வாறு நடப்பதற்குக் காரணம், எவர் திருகோணமலையை வைத்திருக்கிறாரோ அவரே இந்துமா சமுத்திரத்தின் திறவுகோலை வைத்திருக்கிறார் என்பதுதான் கருத்து. என்று திருகோணமலை பறிபோகின்றதோ, யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு கேந்திர ஸ்தானத்தை துண்டித்து விட்டாலோ, காலப் போக்கில் தமிழனுக்குத் தொடர்ச்சியாக நிலப்பரப்பு இல்லாமல் போய்விடும். தமிழனுக்கு எதையும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற வஞ்சக நிலையில்தான் திருகோணமலையில் அடிக்கடி பெரும்பான்மையினர் ஆர்ப்பாட்டங்களும், தாக்குதல்களும் நடாத்துகின்றனர். இவை வெறும் உணர்ச்சி வயப்பட்ட செயல்களல்ல. திட்டமிட்ட சதிகளே இவை.

*கேள்வி:*இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

*பதில்:*தமிழர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் வாழ்ந்த வீடே இன்று தெல்லிப்பளையில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் சிறை வைக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் நான் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, மகாஜன கல்லூரி மாணவர்களுக்கு மீண்டும் படிக்கிற வாய்ப்பு கிட்டியிருக்கிறது. கீரிமலையில் கூட நாம் புனிதக் கடமைகளைக் சுதந்திரமாக நிறைவேற்ற முடியவில்லை. மாவிட்டபுரத்தை மனதார வணங்கவும் முடியவில்லை.

இங்கிருக்கும் ஆரியகுளத்தில் இருக்கும் புத்த கோயில் எடுத்த எடுப்பில் முற்றுப் பெற்று, நிறைவு பெற்று ஆயிரக் கணக்கில் சிங்கள


மா.க.ஈழவேந்தன்

மக்கள் வந்து போகிறார்கள். நாம் அதை குறை கூறவில்லை.

ஆனால் இந்த மண்ணில் உள்ள எத்தனை கோயில்கள், தேவாலயங்கள் இடிந்து அழிந்து போய், உயர் பாதுகாப்பு வலயங்களுள் சிதைவடைந்து கிடக்கின்றன. இதைச் சீரமைக்க ஏன் எதுவுமே செய்யப்படவில்லை?

திருகோணமலையில் கோணேசரைக் கும்பிடுவதற்குக் கூட இராணுவ முகாம்களைக் கடந்து தான் கோயிலுக்குப் போக வேண்டிய நிலை இருக்கிறது. ஆரியகுளத்தில் இருக்கிற புத்த கோவிலுக்கு தென் பகுதிச் சிங்கள மக்கள் தாம் விரும்பியபடி வழிபட்டுச்செல்கிறார்கள். யாரும் அவர்களைத் தடுக்கின்றனரா? தமிழர்கள் சிந்திக்க வேண்டும். சிந்திக்கா விட்டால் நாம் இழந்து விடுவோம் அனைத்தையும். எனவே அவதானமாக இருப்போம்.

**நேர்காணல்: மணிசேகரன்**

## கிளிநொச்சியில்
# விவசாய பீட நிர்மாணம் ஜப்பான் அரசு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் மீள் நிர்மாணம் செய்வதற்கு ஜப்பானிய அரசு நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

கிளிநொச்சியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக விவசாய பீடத்தின் அனைத்துக் கட்டடங்களும் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. இதன் காரணமாக விவசாய பீடம் தற்காலிகமாக யாழ்ப்பாணத்தில் இயங்கிவருகிறது.

அடுத்த ஆண்டு முதல் விவசாய பீடத்தை மீண்டும் கிளிநொச்சிக்கு மாற்றுவதற்கு யாழ். பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.இதற்காக கிளிநொச்சியில் புதிய கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்ட வேண்டியுள்ளது. இப் புதிய நிர்மாணப் பணிகளுக்காகவும் ஏனைய வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும் ஜப்பானிய அரசின் நிதி உதவி பயன்படுத்தப்படவுள்ளது.

மிக விரைவில் கிளிநொச்சியில் கட்டிட நிர்மாணப்பணிகள் ஆரம்பமாகவுள்ளன. அனேகமாக அவை நிரந்தரக் கட்டடங்களாகவே அமைககப்படவுள்ளதாகவும், இவ் வேலைகளை துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

(க,ச)

# தென்னை மீள் நடுகை முன்னோடி நிகழ்ச்சித் திட்டம்!

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் நிர்மூலமாகிப் போன தென்னை மர மீள்நடுகைத் திட்டங்களிற்கு முன்னோடி நடவடிக்கையாக எதிர்வரும் 26 ஆம் திகதி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் வைத்து, அண்மையில் மீளக்குடியமர்ந்த பொதுமக்களுக்கு இலவசமாக தென்னை நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளன என்று விவசாய பீட தகவல் தொடர்பு மையம் அறிவித்துள்ளது.

லண்டனில் வாழும் திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ் . அருளாணந்தத்தினால் வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா நிதி மூலம் 500 நல்லின நாற்றுக்கள் பொலனறுவையில் இருந்து தருவிக்கப்பட்டே இவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

மையத்தினால் பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கக் குறிப்புக்கள் அச்சிடப்பட்டு யாழ்.குடா நாடு முழுவதும் விநியோகிக்கப்பட இருக்கின்றது என்று மையம் மேலும் அறிவித்துள்ளது.

(23)

## ஓட்டோ விபத்தில் ஒருவர் காயம்

(சாவகச்சேரி)

முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த ஓட்டோ ஒன்று, முகமாலைப் பகுதியில் கார் ஒன்றுடன் மோதியதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் - ஓட்டோவைச் செலுத்தி வந்தவரான சா.செல்வமதன் (வயது 20) என்பவரே காயமடைந்ததுடன் இவரது ஓட்டோவும் பலத்த சேதமடைந்தது. (29)

# காலி கலவரத்தின் எதிரொலி பொலிஸாருக்கு இடமாற்றம்

(காலி)

காலி துறைமுகப் பொலிஸார் அனைவரும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

அண்மையில் காலியில் இடம் பெற்ற கலவரங்களின் போது இவர்கள் சரிவரக் கடமையைப் புரியாததனாலேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

காலிக்கலவரங்களின்போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் இறந்ததும் நான்கு பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இப்பொழுது இந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, கலவரத்தில் சம்பந்தப்பட்ட இரு சாராருக்குமிடையில் ஒற்றுமை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# சின்னஞ்சிறு செய்திகள்

## வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(மானிப்பாய்)

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை பொறியியற் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை பொலிஸ் சேவை, இலங்கை கட்டடக் கலைஞர் சேவை என்பனவற்றைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பம் அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் டீட்டா விமலசிறியினால் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 26ஆம் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை, பெலவத்தை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

(100)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னவன் வேலுப்பிள்ளை, மல்வில் இயக்கச்சியைச் சேர்ந்த சின்னத்தம்பி தவமலர் ஆகியோரது விசேட அடையாள அட்டைகளும், கரம்பன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த செல்லத்தம்பி தர்மலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டையும், வவுனியா பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட முதியோர் அறிமுக அட்டையும் - கண்டெடுக்கப்பட்டு நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலகத்தில் நேரிலவந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

## சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறையில்!

சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான சுயவிருப்பில் ஓய்வு பெறும் திட்ட சுற்று நிருபம்-நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை- சுய விருப்பில் ஓய்வு பெறுவதற்கு விண்ணப்பிக்கத்தக்கவாறு நடைமுறையில் உள்ளது எனவும்,

வேலை வழங்கப்படாத கூட்டுத்தாபன ஊழியர்கள் டிசம்பர் முதலாம் திகதி வரை தமது வரவினைப் பதிவு செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்- என்ற கூட்டுத்தாபனத்தின் அறிவித்தல் மட்டும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும்- சீமெந்து கூட்டுத்தாபனக் கணக்காளர் அறிவித்துள்ளார்.

## கைதடியில் இலவச கற்றல் ஒழுங்குகள்

(கச்சாய்)

கைதடி வடக்கு மின்னொளி கல்விக் கழகத்தினரால் க.பொ.த.சா.தரப் பரீட்சைக்குத் தோற்ற உள்ளோருக்கான இலவச கற்றல் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.


கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், சமூகக்கல்வி ஆகிய பாடங்களில் ஏற்படுகின்ற விளக்கமின்மைகளுக்கு, இங்கு விளக்கங்கள் அளிக்கப்படுவதுடன் இலவச பாடக் குறிப்புக்களும் வழங்கப்படுகின்றன. (35)

## கும்பாபிஷேக தினம்

(அச்சுவேலி)

கரணவாய் வடக்கு கொற்றாவத்தை வடுவாக்கட்டை ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக தின விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (76)

# நெடுந்தீவிலிருந்து...







நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி உண்ணாவிரதமிருக்கும் மக்களையும், அமைச்சர் மகேஸ்வரனுடன் கலந்துரையாடும் பொலிஸ் அதிகாரிகளையும், போராட்டத்தில் கலந்துகொண்டுள்ள மக்களின் இன்னொரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.





ஈ.பி.டி.பி. முகாமிற்கு பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருக்கும் பொலீஸாரையும் நெடுந்தீவில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தைப் பார்வையிடும் படையினர் மற்றும் பொலீஸாரையும் நெடுந்தீவுப் பிரதேசசபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தில் பயணிக்கும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.



மூடப்பட்டுக் கிடக்கும் நெடுந்தீவுப் பிரதேச சபை அலுவலகத்தையும் நெடுந்தீவில் நிலைகொண்டிருக்கும் ஈ.பி.டி.பியினரின் முகாம் பகுதியையும் நெடுந்தீவைப் பார்வையிட்ட பின்னர் அங்கிருந்து படகுகளில் புறப்படும் அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் குழுவினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லிவிங்ஸ்டன்)*

# அமெரிக்காவில் தாக்குதல் நடத்தியோருக்கு சவூதி அரசாங்கம் நிதியுதவி செய்ததா?

## மீண்டும் பரபரப்பாகிறது செப்ரெம்பர் 11 தாக்குதல் விடயம்

கடந்த ஆண்டு செம்ரெம்பர் 11 ஆம் திகதி - அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீதான தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு, நிதியுதவி வழங்கியதான குற்றச்சாட்டை சவூதி அரேபியா நிராகரித்துள்ளது.

சவூதி அரேபியாவின் பட்டத்திற்குரிய இளவரசர் அப்துல்லா சார்பில் பேசிய அதிகாரி ஒருவர், இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது -

அமெரிக்காவுக்கான சவூதி அரேபியத் தூதுவரின் மனைவி மூலமாக, இந்த நிதியுதவி இடம்பெற்றதாகக் கூறப்படுவது, வேண்டுமென்றே கிளப்பப்படும் பொய் எனச் சாடியுள்ளார்.

இதேவேளை - குறிப்பிட்ட தாக்குதல் பற்றி விசாரணைகளை மேற்கொண்டுள்ள எவ்.பி.ஐ. புலனாய்வுப் பிரிவு - இத்தாக்குதலில் சவூதி அரேபியாவும் தொடர்புள்ளதா என்பதைப் பற்றி ஆராயவில்லை என, அமெரிக்க காங்கிரஸ் எம்.பிக்கள் சிலர் மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட - காலித் அல் மிதார் மற்றும் நவாவ் அல் ஹஸ்மி ஆகியோர் - சவூதித் தூதுவரின் மனைவியான இளவரசி ஹைபா அல் பைய்சால் மூலமாக, மாதாந்தம் 3500 அமெரிக்க டொலர்களைப் பெற்றுவந்ததாக - அமெரிக்க ஊடகங்கள் சிலவும் தகவல் வெளியிட்டுள்ளன.

உலகவலம்

## உலக அழகிப் போட்டி விளைவித்த வன்செயல்கள்

# நைஜீரியாவில் கிறிஸ்தவர் — முஸ்லிம் இனக் கலவரமாக மாறும் ஆபத்து!

(கடுனா)

நைஜீரியாவில் நடைபெறவிருந்த உலக அழகிப் போட்டியினால் ஏற்பட்ட கலவரம் - தொடர்ந்து பரவலாகி வருவதால் மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் இது இனக்கலவரமாக மாறும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கலவரங்கள் ஆரம்பித்த கடுனா நகரில் பலியானோர் எண்ணிக்கை நூறையும் கடந்து விட்டதாக உள்ளூர்த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக அழகிப் போட்டி நைஜீரியாத் தலைநகர் அபுஜாவிலிருந்து லண்டனுக்கு இடமாற்றப்பட்டதைத் தொடர்ந்து அழகிப் போட்டியில் பங்குபற்ற வந்த அழகிகள், கமரூன் நாட்டு விமானமொன்றில் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடுனாவில் ஊரடங்குச் சட்டம் தற்போது அமுலாக்கப்பட்டிருப்பதோடு அங்கு முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையிலான வன்முறைகளில் கிறிஸ்தவ தேவாலயங்கள் சிலவும் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன.

அழகிப் போட்டியையும், முஸ்லிம் மக்களின் திருத்தூதரான நபியையும் இணைத்து உள்ளூர் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தியே இக்கலவரங்களுக்கு காரணமாக அமைந்தது தெரிந்ததே.

# இன்றைய நாள் இனிய நாள்

## 25-11-2002 - திங்கட்கிழமை

*சித்திரபானு வருடம் - 10ஆம் திகதி - சனி.*

நட்சத்திரம் - பூசம் இரவு 11.05 வரை அதன் மேல் ஆயிலியம்
திதி - அபரபட்ச பஞ்சமி காலை 9.25 வரை அதன்மேல் ஷஷ்டி
ராகுகாலம் - 7.42 - 9.12 சுபநேரம் - 12.12 - 1.42

**மேடம்** :- தேவையற்ற பிரயாணம், காணி சம்பந்தமான பிரச்சனை, வாகனச் செலவு அலைச்சல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- விளையாட்டுத்துறையில் ஊக்கம், காரியசித்தி, ஆடை ஆபரணப் பலன், இளைய சகோதர உறவு, கல்வி நிலை சமம், வியாபார நிலை சமம்.

**மிதுனம்** :- பணவரவு தாமதம், வீட்டில் விவாத அரங்கு அதனால் கவலை, சேமிப்பு வங்கியை மறக்கும் நிலை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார நிலை சமம்.

**கர்க்கடகம்** :- பணவரவு, உறவினர் வருகை, தெய்வவழிபாடு, சமய நூல் கற்றல், கல்வி நிலை சமம், வியாபார நிலை சமம்.

**சிங்கம்** :- தேகசுகக்குறைவு, மதிமயங்கிய செலவு, மற்றவர்களை மதியாத நிலை, அயலவர்களை தேவைக்குக் கூப்பிட முடியாத நிலை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- சமூக சேவையில் ஈடுபாடு, பொருள் வரவு, தெய்வ வழிபாடு, சமயநூல் கற்றல், பாடுபட்டதற்கு பலன் கிடைக்கும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- செய்தொழில் முன்னேற்றம், தொழில் ஸ்தாபனத்தில் சகஊழியர்களின் மதிப்பு, தெய்வ சேவை, தெய்வ நூல் கற்றல், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- தேகசுகக் குறைவு, பிதாவுடன் மனஸ்தாபம், உளத் தாக்கம், எதிர்பாரத பயம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- வதந்திகளால் சிந்தனை இழத்தல், புதிய காரியங்களை தவிர்த்தல் வேண்டும், மனச்சஞ்சலம், கல்விச் சமநிலை, வியாபாரம் சமநிலை.

**மகரம்** :- மனத்தில் இன்பம் பொங்கும், தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், மனத்திற்கு அமைதி கொடுக்கும் உணவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- பணவரவு, அடைவு நகை மீளல், எதிரி தன் நிலைமையை உணர்தல், நோய் நீக்கம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகக்குறைவு, சமூகப்பணியிலிருந்து பின்வாங்குதல், புத்திரரால் செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நெடுந்தீவு விவகாரம் தொடர்பாக இன்று நாடாளுமன்றில் பிரேரணை!

## அமைச்சர் மகேஸ்வரன் கொண்டுவருவார்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் இன்று காலை தனிநபர் பிரேரணை ஒன்றை அமைச்சர் மகேஸ்வரன் கொண்டு வரவுள்ளார்.

நேற்று நெடுந்தீவிற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிந்த அமைச்சர் மகேஸ்வரன், இன்று காலை நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்றின் மூலம் உண்மை நிலையை வெளிக்கொண்டு வரவுள்ளதாகத் தெரிவித்தார்.

இன்றைய பிரேரணையில் ஈ.பி.டி.பி. கட்சியினரின் நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சரிடம் சில விவரங்களை வெளியிட வேண்டும் என்று அமைச்சர் மகேஸ்வரன் வேண்டுகோள் விடுக்கவுள்ளார். தீவுப்பகுதியில் குறிப்பாக நெடுந்தீவில் கடமையிலுள்ள ஈ.பி.டி.பியினரின் பெயர் விபரங்களையும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் அவ்வப்போது ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பாகவும் தகவல் வெளியிட வேண்டும் எனவும் அமைச்சர் மகேஸ்வரன் நாடாளுமன்றில் வேண்டுகோள் விடுக்கவுள்ளார். (க,லி)

## ஒஸ்லோ கூட்டத்தில் புலிகள் தரப்பில் நால்வர்

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் இன்று ஆரம்பமாகும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், புலிகள் தரப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான குழு பங்கேற்கவுள்ளது.

இக்குழுவில் விடுதலைப் புலிகளின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நிபுணரும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரமுகருமான ஜோய் மகேஸ்வரன், ஊடக இணைப்பாரான நடராஜா சுதாகரன் ஆகியோருடன் இக்குழுவின் செயலாளராக திருமதி அடேல் பாலசிங்கம் பணியாற்றுவார். (01)

## ரணிலுக்கு சந்திரிகா அனுப்பிய கடிதம்

(கொழும்பு)

உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்துக்கு புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து அவசரக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிகள் குறித்து ஒஸ்லோவில் புலிகளுடன் பேச்சு நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா ரணிலிடம் கேட்டிருந்தார். இக்கடிதம் விமானம் புறப்படச் சிலமணி நேரத்துக்குள் ரணிலிடம் சேர்க்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

(01)

### நோர்வே....

சாட்டும் நிலையாகவே அமெரிக்கா எடுத்துக்கொள்கின்றது. இது இந்தத் தருணத்தில் சரியான அறிக்கை அல்ல.

இந்த நிலையில் புலிகளும் மனித உரிமைகளைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கக் கூடியவாறு நடந்துகொள்ள வேண்டும்.

பொ.ஐ.முன்னணி தற்போது சமாதான முயற்சிகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, ஊறுவிளைவிக்கும் வகையில் செயற்படக்கூடாது.

பொ.ஐ.முன்னணியின் கருத்துக்களால் நோர்வேயின் சமாதானப் பங்களிப்பு பாதிக்கக் கூடாது என்பதில் அமெரிக்கா கவனமாக இருக்கின்றது.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு அமெரிக்காவின் பிரதிநிதிகள் சென்றாலும், அவர்கள் நிதியுதவிகள் குறித்தே பேசுவார்கள். இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கவோ பேச்சு நடத்தவோ மாட்டார்கள். புலிகள் அமைப்பு இன்னமும் அமெரிக்காவில் வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலிலேயே இருந்து வருகின்றது.

ஆனாலும் புலிகள் சில முக்கியத்துவமான விடயங்களில், முன்னேற்றகரமான நிலையைக் காட்டியுள்ளனர். புலிகள் தாம் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்ற சொல்லைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மனித உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அஷ்லி வில்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## பல்கலை மாணவருக்கு நெடுந்தீவு செல்ல அனுமதி இல்லை!

ஈ.பி.டி.பியினருக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்காக உணவுப் பொருட்களைக் கொண்டு சென்ற மாணவர்களைக் கலகம் அடக்கும் பொலிஸார் தடுத்து நிறுத்தித் திருப்பியனுப்பியதாகப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது மாணவர்கள் நேற்று நெடுந்தீவு செல்லும் நோக்குடன் குறிகாட்டுவான் துறைக்குச் சென்றனர். அங்கு மாணவர்களைத் துறைமுகத்துக்குள் செல்லவிடாது 300 இற்கும் மேற்பட்ட கலகமடக்கும் பொலிஸார் பொல்லுகள், கண்ணீர்ப்புகைக்குண்டுகள், முட்கம்பிகள், கனரக ஆயுதங்களுடன் நின்று தடுத்தனர் என மாணவர்கள் தெரிவித்தனர்.

### 40 நாடுகள்....

கனடாவின் வெளியுறவு உதவிச் செயலாளர் டேவிட் டில்கோர், டென்மார்க்கின் சர்வதேச உதவிச் செயலாளர் பீற்றர் லி கோல்ரி, ஐரோப்பிய யூனியனின் ஆணையாளர் மார்க்கெட் வொல்ரொம், ஜேர்மனியின் பொருளாதார உதவி ஆலோசகர், தாய்லாந்தின் உதவி வெளிவிவகார அமைச்சர், அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் ஆகியோர் ஒஸ்லோவை சென்றடைந்துள்ளோரில் முக்கியமானவர்களாவர்.

ஒஸ்லோவில் ஹோல்மென் கொலென் (**Holmen Kollen**) ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் - 40 நாடுகள் கலந்துகொள்ளவுள்ளன.

இம்மாநாடு நோர்வே நேரப்படி இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய யூனியன், சீனா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஐஸ்லாந்து, இத்தாலி, கொரியா, குவைத், நெதர்லாந்து, சவூதி அரேபியா, சுவிற்சர்லாந்து, சுவீடன், தாய்லாந்து, ஒஸ்ரியா, பெல்ஜியம், குறோசியா, கியூபா, டொமினிகன் குடியரசு, இஸ்ரேல், ஹங்கேரி, இந்தியா, கௌதமாலா, மொராக்கோ, பாகிஸ்தான், போர்த்துக்கல், ரஷ்யா, ஸ்லோவாக், தென்னாபிரிக்கா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் உட்பட 40 நாடுகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)



நேற்று ஒஸ்லோவில் நடந்த சந்திப்பில் எரிக் சொல்ஹேய்ம், ஹெல்கிஸன், ரணில், பாலசிங்கம்.

## நெடுந்தீவின் உண்மை நிலையை அறிய

# பத்திரிகையாளர்கள், அமைச்சர்களை கூட்டிச்செல்வதற்கு நடவடிக்கை

நெடுந்தீவின் உண்மைநிலையை உலகிற்கு எடுத்துக்காட்டுவதற்கு தான் முயற்சி செய்யவுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இன்னும் ஓரிரு நாட்களில் உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர்களையும், முக்கிய அமைச்சர்கள் சிலரையும் அழைத்துச்சென்று நெடுந்தீவின் உண்மை நிலையை வெளியுலகிற்கு அம்பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி நெடுந்தீவு மக்கள் நடாத்தி வருகின்ற மக்கள் போராட்டத்தின் தார்ப்பரியமும் நெடுந்தீவின் இன்றைய உண்மை நிலையும் மூடி மறைக்கப்பட்டு வந்தன. இவ்வாறான நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மேற்படி நடவடிக்கையைத் தான் எடுக்கவிருப்பதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

# மாநாடு தொடங்குவதற்கு முன்னர் ரணில் - நோர்வே பிரதமர் சந்திப்பு!

(கொழும்பு நிருபர்)

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஒஸ்லோவுக்குச் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மாநாடு தொடங்குவதற்கு முன்னர் இன்று நோர்வே பிரதமரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவார் எனப் பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று காலை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இடம் பெறுகின்றது. இதில் கலந்து கொள்வதற்கு முன்னர்- ரணில் விக்கிரமசிங்க, நோர்வேயின் பிரதமர் ஷெல் பொன்டவிக்கைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இப்பேச்சுக்களின் போது இலங்கையின் சமாதான முயற்சிகள், போரினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், இந்தப் பாதிப்புக்களில் இருந்து மீள்வதற்கான உதவிகளை வெளிநாடுகளிடம் இருந்து பெறுதல், நாட்டினை அபிவிருத்தி செய்வது போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீருடையில் வந்தோரால் அறுத்தெறியப்பட்ட கொடிகள்

முகமாலையில் மாவீரர் தினத்தையொட்டி கட்டப்பட்டிருந்த சிவப்பு, மஞ்சள் கொடிகள் நேற்றிரவு 7.30 மணியளவில் இராணுவச் சீருடையணிந்தோரால் அறுத்தெறியப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து மக்கள் கோபமடைந்த நிலையில் காணப்பட்டதாக எமது செய்தியாளர் அறிவிக்கின்றார்.

### பாதுகாப்பு....

எடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்புக்குறித்து பின்னர் கருத்து வெளியிட்ட கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பேச்சுக்கள் சுமுகமாகவும் நம்பிக்கையூட்டக் கூடிய வகையிலும் இடம்பெற்றமை தமக்கு மகிழ்ச்சியைத்தருவதாக குறிப்பிட்டார்.

அத்துடன், முன்னேற்றகரமானதாக குறிப்பிடக்கூடிய இச்சந்திப்பின்போது பாதுகாப்பு விடயங்கள் மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வட-கிழக்கின் தற்போதைய நிலை, உப குழுக்களின் செயற்பாடுகள் என்பன குறித்தும் ஆராயப்பட்டதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது- நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினர் தற்போது பிரச்சினையைக் கிளப்பியுள்ளமைக்கு நாடாளுமன்றத் தேர்தல் ஒன்று விரைவில் வரலாம் என்பதே காரணமாக இருக்கக் கூடும் எனத் தாம் கருதுவதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததாகவும்,

அதற்கு ரணில் பதிலேதும் அளிக்காமல் புன்னகை செய்ததாகவும் தெரிவிக்கப்டுகின்றது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவரான பிரதமரைப் புலிகள் அமைப்புப் பிரதிநிதி ஒருவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளமை இதுவே முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மக்களின் பாதுகாப்பை...

மகேஸ்வரன் சந்தித்தார்.

நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெற்ற மேற் படி சந்திப்பின்போது பொதுமக்க ளின் பிரதிநிதிகள், அப்பகுதி பிரதேச செயலர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் ஆகியோரும் நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி. பியினரின் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள பொலிஸ் அதிகாரியும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது தற்போது நெடுந்தீவில் உருவாகியிருக்கும் பதற்ற நிலையை எவ்வாறு தணிப்பது என்பது குறித்தும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது குறித்தும் சிவில் சட்ட நடைமுறைகளை அமுல்படுத்துவது எவ்வாறு என்பது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இச்சந்திப்பின் இறுதியில் சில விடயங்களில் அனைத்துத் தரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இணக்கப்பாடுகள் ஏற்பட்டன.

இதன்படி - ஈ.பி.டி.பி. கட்சியினர் மாலை ஆறு மணிக்குப் பின்னர் தமது முகாமுக்கு வெளியில் நடமாடுவது நிறுத்தப்பட வேண்டுமென்றும், பகல் வேளைகளில் நடமாடும்போது பொலிஸ் உத்தியோகத்தர்களை உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்றும், பொதுமக்களின் வீடுகளை வலுக்கட்டாயமாக பயன்படுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், பொதுமக்களின் சொத்துக்களையும், உபகரணங்களையும் பயன்படுத்தக்கூடாது என்றும், பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனங்களையும் ஏனைய தளபாடங்களையும், கட்டடங்களையும் கட்சியின் தேவைக்காக பயன்படுத்தக்கூடாது என்றும், ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் தமது முகாமிலிருந்து வெளியே செல்லும் போதும் உள்ளே நுழையும்போதும் காவல் கடமையிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தரிடம் பெயர் விபரத்தையும் நேரத்தையும் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்றும் மேற்படி சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதேவேளை, ஈ.பி.டி.பி கட்சியினரை நெடுந்தீவிலிருந்து முற்றாக வெளியேற்றும் வரை தமது எதிர்ப்புப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்றும் தமது போராட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும், போராட்டத்தில் ஈ[illegible] பட்டிருக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகள் இச்சந்திப்பின்போது உறுதியாக வலியுறுத்தினர்.

### தேசிய....

தேசியக்கொடி ஏற்றல், ஈகச்சுடர் ஏற்றல், மலர்வணக்கம், அகவணக்கம், உறுதியுரை எடுத்தல், நினைவுரை நிகழ்த்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றைவிட குடாநாட்டின் அனைத்துப் பிரதான வீதிகள், சந்திகள், பொது இடங்கள் ஆகியவற்றில் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டும், மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டும் உள்ளன. அத்துடன் வீதிகள் தோறும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன. சந்திகள் தோறும் ஒலிபெருக்கிகள் மூலம் தமிழீழ எழுச்சிக் கீதங்கள் இசைக்கப்பட்டு வருகின்றன. யாழ்.ந[illegible] மத்தியிலும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் மஞ்சள் சிவப்புக் கொடிகளும் கட்டப்பட்டுள்ளன. இதேபோன்று, குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக மாவீரர் எழுச்சி நாட்களுக்கான ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர். மொத்தத்தில் யாழ்.குடாநாடு முழுவதும் எழுச்சிக்கோலமாகக் காட்சியளிக்கிறது. நாளைமறுதினம் இறுதிநாள் நிகழ்வுகள் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெறவுள்ளன. (க)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.11.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.